
Registered as a news paper.     பக்கங்கள்: பன்னிரண்டு     விலை: ரூபா 7.00

# ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 வைகாசி 01 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ர.அவ்வல் 23 (14.05.2004) வெள்ளிக்கிழமை இதழ்:225

புதுப்பொலிவுடன் திருநெல்வேலியில்
WESTERN UNION பணப் பரிமாற்றம்
●விரைவானது ●பாதுகாப்பானது ●நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு
☞ பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத்தேவையில்லை
☞ வங்கிக் கணக்கு அவ்சியமில்லை
☞ நீடிக்கப்பட்ட சேவை நேரம்
☞ 365 நாள் சேவை
☞ 10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்
THIRUMURUGAN COM.NET
T.P: 021-222 7310
021-222 7555
021-222 7560
Fax: 021-222 7310
E-mail: thirumurugan@eudoramail.com
46, ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச. முன்பாக) திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

# பேச்சுக்கள் எங்கே? எப்போது? என்று இன்னும் ஓரிரு தினங்களில் முடிவாகும்!

## கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அறிவிப்பு

(கிளிநொச்சி)

**அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையில் அடிப் படையான சில விடயங்களில் இணக்கப்பாடு காணப்பட்டு பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான நல்லதொரு புறச்சூழல் உருவாகி வருவதாகவும் -**

**இன்னும் ஓரிரு தினங்களில் இந்தச் சமாதானப் பேச்சுக்களை எங்கே நடத்துவது என்பது குறித்து முடிவு எடுக்கப்படும் என்றும் தமிழீழ விடுத லைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.**

நோர்வேயின் பிரதி வெளிவிவ கார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தலைமையிலான நோர்வே தூதுக் குழுவினைச் சந்தித்துப் பேச்சு நடத் திய பின்னர் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே கலா நிதி அன்ரன் பாலசிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் செய்தியாளர்களிடம் தொடர்ந்து கருத்து வெளியிடுகை யில்,

தீர்க்கமான முடிவுகள் எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற் கான சில அடிப்படைப் பிரச்சனை களை எழுப்பியிருந்தோம். அனேக மான பிரச்சனைகள் வந்து எங்க ளுக்கு திருப்திகரமாக உள்ளது. என்ன என்ன விடயங்கள் என்பதை விபரமாக சொல்ல விரும்பவில்லை.

ஆனால், ஒட்டுமொத்தமாக இந் தப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப் பதற்கான முன் முயற்சிகள் மிகவும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மினிபஸ் மோதியதில் சிறுவன் தலை சிதறி பலி

### மோதிய பஸ் தீவைத்து எரிப்பு

(யாழ்ப்பாணம்)

மினிபஸ் மோதியதால் தலை சிதறி சிறுவன் ஒருவன் பரிதாபக ரமாக உயிரிழந்த சம்பவமொன்று நேற்றுக்காலை 11.00 மணியளவில் சுழிபுரம் சந்திக்கு அருகில் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் பெரியபுலவு சுழிபுரத்தைச் சேர்ந்த இராசன் விஜயகாந்தன் (வயது 14) என்ற சிறுவனே உயிரிழந்தவராவார்.

உயிரிழந்த சிறுவன் வீட்டிலிருந்து சந்தைக்கு பொருட்களை வாங்கச் சென்ற சமயம் - பஸ் ஒன்றைத் துரத்திச் சென்ற மினிபஸ் அதனை முந்த முற்பட்டபோதே - இந்த விபத்து இடம்பெற்றது.

மினிபஸ் மோதியதால் சிறுவன் கீழே வீழ்ந்து மினிபஸ்ஸின் சில் லுக்குள் அகப்பட்டதால் தலை சிதறி மரணமடைந்தார்.

இந்தச் சம்பவத்தை அடுத்து சிறுவனை (12 ஆம் பக்கம் பார்க்க)

am Foundation.
aham.org

# யுவதியை கடத்தியவர்கள் மடக்கிப் பிடிக்கப்பட்டனர்!

(யாழ்ப்பாணம்)

க.பொ.த உயர்தரப்பரீட்சையை எழுதிவிட்டு வீடுசென்றுகொண்டிருந்த யுவதியை வெள்ளை வானில் கடத்தியவர்கள் பொதுமக்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் யாழ்.நீராவியடிப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 4.00 மணியளவில் இடம்பெற்றது.

இந்தச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது -

நேற்றுப்பிற்பகல் 4.00 மணியளவில், க.பொ.த உயர்தரப் பரீட்சை எழுதிவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த யுவதியை நீராவியடிப்பகுதியில் வைத்து வெள்ளை வானில் வந்தவர்கள் கடத்திச் சென்றனர்.

இதனை அவதானித்த சில இளைஞர்கள் (12 ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி சந்திரிகா அனுப்பிய செய்தியுடன் நோர்வேத் தூதுக் குழு புலிகளுடன் பேச்சு!

விடுதலைப்புலிகளுக்கு ஜனாதிபதி சந்திரிகா அனுப்பிய விசேட செய்தியுடன், நேற்றுக்காலை நோர்வேத் தூதுக்குழுவினர் கிளிநொச்சிக்கு வருகைதந்து புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் மற்றும் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஆகியோரை சந்தித்து பேச்சு நடத்தினர்.

நேற்றுக்காலை 10.00 மணியளவில் விமானப்படை ஹெலிகொப்டர் மூலம் கிளிநொச்சியை வந்தடைந்த நோர்வேத் தூதுக்குழுவில்- பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிஸன், இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

இவர்களை அரசியற்துறைத் துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் மற்றும், சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் வரவேற்று விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்துக்குஅழைத்துச் சென்றனர்.

நோர்வே தூதுக் குழுவுடன் சமாதான செயலகத்தில் நடைபெற்ற பேச்சுக்களில் - புலிகளின்அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன்பாலசிங்கம் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியாவில் காங்கிரஸ் கட்சி மீண்டும் ஆட்சியைப் பிடித்தது!



## சோனியாகாந்தி பிரதமராகிறார்

இந்தியாவின் 13 ஆவது நாடாளுமன்றத்தைத் தெரிவு செய்வதற்காக நடத்தப்பட்ட தேர்தலில் ஆளும் பாரதிய ஜனதாக் கட்சிக்குப் பெரும் தோல்வி ஏற்பட்டிருப்பதுடன் காங்கிரஸ் கூட்டணி ஆட்சியைப் பிடிக்கும் நிலையில் இருக்கின்றது. நேற்றுக் காலை வாக்குகள் எண்ணும் பணி ஆரம்பமானதையடுத்து முடிவுகள் வெளிவரத் தொடங்கின.

இந்த முடிவுகளில் ஆளும் பாரதிய ஜனதாக் கூட்டணிக்கு பெரும் பின்னடைவு ஏற்பட்டதுடன் காங்கிரஸ் கூட்டணிக்கு எதிர்பார்க்கப்பட்டதிலும் அதிக இடங்கள் கிடைத்தன.

539 தொகுதிகளில் காங்கிரஸ் கூட்டணிக்கு 219 இடங்களும் பாரதிய ஜனதாக் கூட்டணிக்கு 188 இடங்களும் ஏனைய கட்சிகளுக்கு 132 இடங்களும் கிடைத்துள்ளன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியாவில் நேற்றிரவு குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

வவுனியா மகாறம்பைக்குளப் பகுதியில் நேற்று இரவு இளம் குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கிளிநொச்சியைச் சேர்ந்த காளிமுத்து சந்திரகுமார் (வயது 28) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே சுட்டுக் கொல்லப்பட்டவராவர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

கிளிநொச்சியைச் சேர்ந்த இவர் தற்போது - வவுனியா மகாறம்பைக் குளத்தில் குடியிருந்து வந்தார். நேற்று இரவு 9 மணியளவில் ஆட்டோவில் இவரது வீட்டிற்குச் சென்றசிலர் இவரை வீட்டிலிருந்து அழைத்து வெளியில் சுட்டுக்கொன்று விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இறந்தவரான சந்திரகுமாரின் சடலம் வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

am Foundation.
anaham.org

# இந்திய நாடாளுமன்றத் தேர்தல்

## தமிழக முடிவுகள்

| தொகுதி | வெற்றிபெற்றவர் | இரண்டாம் இடம் பிடித்தவர் | வாக்கு வித்தியாசம் |
|---|---|---|---|
| **தி.மு.க** | | | |
| தென் சென்னை | டி.ஆர்.பாலு | பதர் சயீத் (அ.தி.மு.க) | |
| மத்திய சென்னை | தயாநிதி மாறன் | பாலகங்கா (அ.தி.மு.க) | 1,34,178 |
| வட சென்னை | செ.குப்புசாமி | சுகுமாறன் நம்பியார் (பா.ஜ.க) | 64,682 |
| திருச்செந்தூர் | ராதிகா செல்வி | தாமோதரன் (அ.தி.மு.க) | 1,84,000 |
| புதுக்கோட்டை | ரகுபதி | ரவிச்சந்திரன் (அ.தி.மு.க) | 1,56,496 |
| கிருஷ்ணகிரி | சுகவனம் | நஞ்சே கௌடு (அ.தி.மு.க) | 1,19,223 |
| கரூர் | கே.சி.பழனிச்சாமி | ராஜா பழனிச்சாமி (அ.தி.மு.க) | 1,90,786 |
| ராமநாதபுரம் | பவானி ராஜேந்திரன் | முருகேசன் (அ.தி.மு.க) | 1,09,950 |
| பெரம்பலூர் | ராஜா | சுந்தரம் (அ.தி.மு.க) | 1,53,333 |
| திருப்பத்தூர் | வேணுகோபால் | கே.ஜி.சுப்பிரமணி (அ.தி.மு.க) | 1,35,621 |
| கடலூர் | வேங்கடபதி | சொரத்தூர் ராஜேந்திரன் (அ.தி.மு.க) | 1,31,352 |
| திருச்செங்கோடு | சுப்புலட்சுமி ஜெகதீசன் | எடப்பாடி பழனிச்சாமி (அ.தி.மு.க) | 1,74,648 |
| நாகப்பட்டினம் | விஜயன் | அர்ஜுனன் (அ.தி.மு.க) | 2,16,461 |
| ஸ்ரீபெரும்புதூர் | கிருஷ்ணசாமி | வேணுகோபால் (அ.தி.மு.க) | 2,29,059 |
| தஞ்சாவூர் | பழனிமாணிக்கம் | தங்கமுத்து (அ.தி.மு.க) | 1,20,108 |
| வேலூர் | காதர் மொய்தீன் | [illegible]பயூர் சந்தானம் (அ.தி.மு.க) | 1,78,610 |
| **பா.ம.க** | | | |
| செங்கல்பட்டு | ஏ.கே.மூர்த்தி | கே.என்.ராமச்சந்திரன் (அ.தி.மு.க) | 1,48,724 |
| பாண்டிச்சேரி | ராமதாஸ் | லலிதா குமாரமங்கலம் (அ.தி.மு.க) | 69,179 |
| திண்டிவனம் | தன்ராஜ் | அருள்மொழித்தேவன் (அ.தி.மு.க) | 91,130 |
| சிதம்பரம் | பொன்னுசாமி | தடா பெரியசாமி (பா.[illegible]) | 89,905 |
| அரக்கோணம் | வேலு | சண்முகம் (அ.தி.மு.க) | 1,02,196 |
| தர்மபுரி | செந்தில் | பு.தா.இளங்கோவன் (பா.ஜ.க) | 2,16,090 |
| **ம.தி.மு.க** | | | |
| வந்தவாசி | செஞ்சி ராமச்சந்திரன் | லட்சுமி ராஜன் (அ.தி.மு.க) | 1,51,463 |
| திருச்சி | எல்.கணேசன் | பரஞ்ஜோதி (அ.தி.மு.க) | 2,16,725 |
| சிவகாசி | ரவிச்சந்திரன் | கண்ணன் (அ.தி.மு.க) | 1,64,517 |
| பொள்ளாச்சி | கிருஷ்ணன் | ஜி.முருகன் (அ.தி.மு.க) | 1,20,987 |
| **மாக்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி** | | | |
| மதுரை | மோகன் | போஸ் (அ.தி.மு.க) | 1,32,000 |
| நாகர்கோவில் | பெல்லார்மின் | சி.பி.ராதாகிருஷ்ணன் (பா.ஜ.க) | 1,68,176 |
| **இந்திய கம்யூனிஸ்ட்** | **இந்திய கம்யூனிஸ்ட்** | | |
| கோயம்புத்தூர் | சுப்பராயன் | பொன்.ராதாகிருஷ்ணன் (பா.ஜ.க) | 1,64,505 |
| தென்காசி | அப்பாத்துரை | முருகேசன் (அ.தி.மு.க) | 1,22,176 |
| **காங்கிரஸ்** | | | |
| பழனி | கார்வேந்தன் | கிஷோர்குமார் (அ.தி.மு.க) | 2,30,000 |
| சிவகங்கை | ப.சிதம்பரம் | கருப்பையா (அ.தி.மு.க) | 1,62,725 |
| பெரியகுளம் | ஆரூண் | தினகரன் (அ.தி.மு.க) | 21,155 |
| ராசிபுரம் | ராணி | அன்பழகன் (அ.தி.மு.க) | 1,19,577 |
| சேலம் | தங்கபாலு | ராஜசேகரன் (அ.தி.மு.க) | 1,75,677 |
| கோபி | இளங்கோவன் | கோவிந்தராஜ் (அ.தி.மு.க) | 2,14,477 |
| மயிலாடுதுறை | மணிசங்கர ஐயர் | ஓ.எஸ்.மணியம் (அ.தி.மு.க) | 1,96,000 |
| திருநெல்வேலி | தனுஷ்கோடி ஆதித்தன் | அமிர்தகணேசன் (அ.தி.மு.க) | 1,67,000 |
| திண்டுக்கல் | என்.எஸ்.வி.சித்தன் | எம்.ஜெயராமன் (அ.தி.மு.க) | 1,55,171 |
| நீலகிரி | ஆர்.பிரபு | மாஸ்டர் மாதன் (பா.ஜ.க) | 2,36,502 |

# கர்நாடக மாநில தேர்தல் காங்கிரஸ் கட்சி தோல்வி!

காங்கிரஸ் கட்சி தேசிய அளவில் ஆச்சரியமான வெற்றியை பெற்றாலும் கர்நாடகத்தில் அக்கட்சி தோல்வியடைந்துள்ளது. இதையடுத்து முதல்வர் கிருஷ்ணா நேற்று தனது பதவியை ராஜினாமா செய்தார்.

அந்த மாநிலத்தில் மக்களவைத் தேர்தலிலும், சட்டமன்றத் தேர்தலிலும் பா.ஜ.க முன்னிலையில் உள்ளது. இரண்டாவது இடத்தில் காங்கிரஸும், தேவகௌடாவின் மத சார்பற்ற ஜனதா தளம் மூன்றாவது இடத்திலும் உள்ளன.

மொத்தம் 224 உறுப்பினர்களைக் கொண்ட சட்டசபையில் ஆட்சியமைக்க 112 இடங்கள் தேவை. ஆனால், இதுவரை முடிவு அறிவிக்கப்பட்ட 194 இடங்களில் பா.ஜ.க. 77 இடங்களிலும், காங்கிரஸ் 56, கௌடாவின் கட்சி 52 இடங்களிலும் வென்றுள்ளன. மீதியுள்ள இடங்களை சுயேட்சைகள், சிறிய கட்சிகள் பிடித்துள்ளன.

இதனால் அங்கு யாருக்கும் பெரும்பான்மை கிடைக்காத சூழல் உருவாகியுள்ளது. இதனால் காங்கிரஸும், கௌடாவும் இணைந்து ஆட்சியை அமைக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

கர்நாடகத்தில் மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க பெரும் வெற்றி பெற்றுள்ளது. மொத்தமுள்ள 28 இடங்களில் 17 இல் பா.ஜ.கவும், இரு இடங்களில் காங்கிரஸும் வென்றுள்ளன.

## இந்தியச் செய்திகள்

# காங்கிரஸ் ஆட்சியமைக்கும்; சோனியா காந்தி பிரதமராவார்!

### காங்கிரஸ் கட்சி கூறுகிறது

(புதுடெல்கி)

தேர்தலில் காங்கிரஸுக்கும், கூட்டணிக் கட்சிகளுக்கும் 225 இடங்களும், இடதுசாரிக் கட்சிகளுக்கு 50 இடங்களும் பெறும் சூழ்நிலையில் தாம் ஆட்சியமைக்க உரிமை கோருவோம் என்று காங்கிரஸ் அறிவித்துள்ளது.

அடுத்த பிரதமராக சோனியா காந்தி பதவியேற்பார் என்றும், காங்கிரஸ் கட்சி அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

ஆனால், சோனியாதான் பிரதமர் என்ற முடிவை கூட்டணிக் கட்சிகளின் மீது திணிக்கமாட்டோம் என்றும், அவர்களுடன் பேசிய பின்னரே இறுதி முடிவு எடுக்கப்படும் எனவும் அக்கட்சியின் மூத்த தலைவரான அம்பிகா சோனி தெரிவித்தார்.

ஆட்சியமைக்க ,272 இடங்கள் தேவை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் காங்கிரஸுக்கு ஆதரவு தரத் தயாராக இருப்பதாக முலாயம் சிங்கின் சமாஜ்வாதிக் கட்சியும், மாயாவதியின் பகுஜன் சமாஜ கட்சியும் அறிவித்துள்ளன.

இதில் சமாஜ்வாதி 30 இடங்களிலும், பகுஜன் சமாஜ் 20 இடங்களிலும் முன்னணியில் உள்ளன. இரு கட்சிகளுக்கும் எப்போதுமே ஒத்துவராது என்றாலும் - இரண்டும் காங்கிரஸை ஆதரிக்க முன்வந்துள்ளன.

ஆனால், இந்தக் கட்சிகளின் ஆதரவு இல்லாமல் தனது கூட்டணிக் கட்சிகளின் உதவியைக் கொண்டே காங்கிரஸ் ஆட்சியமைக்கக்கூடிய சூழல் நிலவுகின்றது.

# எதிர்பார்க்கப்பட்ட மாநிலங்களிலும் பாரதீய ஜனதாவுக்குத் தோல்வி!

ராஜஸ்தான் - மத்தியப் பிரதேசத்தில் பெரும் வெற்றிபெற்றுள்ள பா.ஜ.கவுக்கு குஜராத்தில் அதிர்ச்சித் தோல்வி ஏற்பட்டுள்ளது. இங்குள்ள 26 இடங்களில் காங்கிரஸ் 13 இடங்களைப் பிடித்துள்ளது.

அதேபோல ஆந்திர சட்டமன்றத் தேர்தலில் தோல்வியைத் தழுவிய தெலுங்கு தேசம், பா.ஜ.க கூட்டணிக்கு மக்களவைத் தேர்தலிலும் பெரும் சரிவு ஏற்பட்டுள்ளது. கடந்த முறை 36 இடங்களைப் பிடித்த இக் கூட்டணிக்கு இம்முறை 5 இடங்களே கிடைத்துள்ளன. இதில் பா.ஜ.கவுக்கு ஒரு இடமும் கிடைக்கவில்லை.

மேற்கு வங்கத்தில் மம்தா பானர்ஜியின் திரிணமூல் காங்கிரஸும் அக் கட்சியுடன் கூட்டணி அமைத்த பா.ஜ.கவும் படுதோல்வியடைந்துள்ளன.

அந்த மாநிலத்தின் 39 இடங்களில் 33 தொகுதிகளை இடதுசாரிக் கூட்டணி கைப்பற்றியுள்ளது. மற்ற 5 இடங்களை காங்கிரஸ் பிடித்துள்ளது.

அதேநேரத்தில் கர்நாடகத்தில் மொத்தமுள்ள 28 தொகுதிகளில் 12 இடங்களில், ராஜஸ்தானிலுள்ள 25 இடங்களில் 21 தொகுதிகளிலும் பா.ஜ.க வென்றுள்ளது.

குஜராத்தைப் போலவே மகாராஷ்டிரத்திலும் பா.ஜ.க - சிவசேனா கூட்டணிக்கு காங்கிரஸ் கடும் போட்டியை ஏற்படுத்தியுள்ளது. காங்கிரஸ்-சரத்பவார் கூட்டணி 17 இடங்களையும், பா.ஜ.க. சிவசேனா கூட்டணி 17 இட்ங்களையும் பிடித்துள்ளன.

மத்திய அமைச்சர்களான ராம் நாயக், ஜெயவந்தி ஆகியோர் தோல்வியைத் தழுவியுள்ளனர். பெட்ரோலிய அமைச்சரான நாயக்கை நடிகர் கோவிந்தா தோற்கடித்தார்.

லட்சதீவுத் தொகுதியில் பி.ஜே.பி சார்பில் போட்டியிட்ட துணை சபாநாயகர் பி.எம்.சையத் 71 வாக்குகளால் தோல்வியடைந்தார்.


## விஞ்ஞான பீட பரிசளிப்பு விழா


யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் 30 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நமது ஈழநாடு பத்திரிகை அனுசரணையுடன் யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட அஞ்சலோட்டப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் வைபவம் நாளை (சனிக்கிழமை) 15.05.2004 காலை 9.00 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவிருக்கின்றது. வெற்றிபெற்ற பாடசாலை அணிகளைச் சேர்ந்த வீர/வீராங்கனைகளை அன்புடன் அழைக்கின்றோம்.

விஞ்ஞான பீட
மாணவர் ஒன்றியம்,
யாழ்.பல்கலைக்கழகம்

(சி-2525)


# தமிழக மக்கள் ரஜினியை முக்காடு போட்டு மூலையில் உட்கார வைத்து விட்டனர்!

### பா.ம.க நிறுவுனர் ராமதாஸ் தெரிவிப்பு



தமிழக மக்கள் ரஜினியை முக்காடு போட்டு மூலையில் உட்கார வைத்துவிட்டனர் என பா.ம.க நிறுவுனர் ராமதாஸ் கூறியுள்ளார்.

ரஜினியின் கடும் எதிர்ப்பு, ரசிகர்களின் பிரசாரத்தையும் மீறி போட்டியிட்ட 6 தொகுதிகளிலும் பா.ம.க வெற்றிபெற்றுள்ள நிலையில் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கை -

சோனியா காந்தியை பதிபக்தி இல்லாதவர் என்று தனிப்பட்ட முறையில் தரம்தாழ்த்தி, தாக்கி- முதல்வர் ஜெயலலிதா எங்கள் கூட்டணியின் பிற தலைவர்களையும் கேவலமாக விமர்சித்தார்.

ஜெலலிதாவின் கண்ணியமற்ற செயல்களுக்கு மக்கள் சரியான பாடம் புகட்டியிருக்கிறார்கள். ஒரு மாநிலத்தில் ஆளும் கட்சி எல்லா இடங்களிலும் தோற்ற வரலாறே இல்லை.

இப்போது போட்டியிட்ட எல்லா இடத்திலும் ஆளும்கட்சி தோற்ற ஒரே மாநிலம் என்ற வகையில் தமிழகத்தை ஜெயலலிதா முதலிடத்துக்குக் கொண்டுபோய்விட்டார்.

அ.தி.மு.க - பா.ஜ.க கூட்டணி லட்சியக் கூட்டணி என்று அந்த இரு கட்சித் தலைவர்களும் சொல்லி வந்தார்கள். இதனால் அந்தக் கூட்டணி இத்தோடு முடிந்துவிடக்கூடாது.

சட்டசபைத் தேர்தலிலும், இந்த லட்சியக் கூட்டணி தொடரவேண்டும்.

இரட்டை இலைக்கு வாக்களித்தால் தமிழகத்தை ஆண்டவனால் கூட காப்பாற்ற முடியாது என்று சொன்ன ஒருவர் (ரஜினி), இந்த முறை இரட்டை இலைக்கு வாக்களிக்கச் சொன்னார்.

நாங்கள் போட்டியிட்ட 6 இடங்களிலும் வீழ்த்திக் காட்டுவேன் என்று சபதமிட்டு அதற்கான வேலைகளிலும் ஈடுபட்டார்.

அவருக்கு முக்காடு போட்டு மூலையில் உட்கார வைத்த தமிழக வாக்காளர்களுக்கு எனது நன்றி.

இந்த மாபெரும் வெற்றிக்கு வழி வகுத்த கருணாநிதிக்கும், கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கு என் நன்றி.

இவ்வாறு. ராமதாஸ் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.


நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜய், சிநேகா, நாசர் நடித்த
வசீகரா
காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00,9.00(பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு, இரவு : 8.45(பு.நே.)
ஜேம்ஸ் பொண்ட் 007 நடித்த
The World is not enough
(சி-2386)

ராஜா யாழ்ப்பாணம்.
5 ஆவது கடைசி வாரம்
இளைய தளபதி
விஜய், திரிஷா நடித்த
கில்லி

காட்சிநேரம்:-10.30,2.30,6.30,9.30 (பு.நே)
21 ஆம் திகதி முதல்
ஆயுதஎழுத்து
(சி-2387)

நாகம்ஸ் சுன்னாகம்
3 ஆவது வெற்றிவாரமாக
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடாக
டொல்பி ஒலியமைப்புடன்
விக்ரம், ஜோதிகா, கபாலி, வடிவேலு நடித்த

அருள்
(றீல்ஸ்)
(சி-2397)
தினசரி காட்சிகள் : 11.00, 2.00, 7.00 (பு.நே)
மே 7 முதல் அருள் திரைப்படம் திரையிடப்படும் இறுதிநாள் வரையான நுழைவுச் சீட்டுக்களை ரசிகர்களே பாதுகாத்துக்கொள்ளுங்கள்.
குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் மூன்று ரசிகர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.
1 ஆம் பரிசு - துவிச்சக்கரவண்டி
2 ஆம் பரிசு - C.D பிளேயர் ஒசாக்கி
3 ஆம் பரிசு - மேசை மின் விசிறி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1983 ஜூலைக் கலவரத்தில் பாதிக்கப்பட்டோருக்கு நட்டஈடு

(கொழும்பு)

1983 ஆம் ஆண்டு ஜூலைக் கலவரத்தில் பாதிக்கப்பட்டோருக்கு நட்டஈடுகள் வழங்கப் படவுள்ளன. இதற்கான தீர்மானம் ஒன்று நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

ஜனாதிபதியின் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில், 1983 ஆம் ஆண்டு ஜூலைக கலவரத்தின்போது உயிரிழந்தவர்களின் உற வினர்களுக்கும் மற்றும் சொத்துகளுக்கு சேதம் ஏற்பட்டோருக்கும் நட்டஈடுகளை வழங் கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

1983 ஆம் ஆண்டின் ஜூலைக் கலவரத்தின் போது இடம்பெற்ற சுமார் 94 சம்பவங்க ளுக்கே இந்த நட்டஈடுகள் பகிரப்படவுள்ளன.

இதேவேளை, லஞ்சம் மற்றும் ஊழல்க ளுக்கு எதிரான ஆணைக்குழுவை - இரண்டு திணைக்களங்களுக்குகீழ் நடத்திச் செல்ல வும் இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் தீர் மானம் மேற்கொள்ளப்பட்டது.

# அரசுக்கு நிபந்தனையுடன் முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவு

## ரவூப் ஹக்கீம் அறிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அர சுக்கு நிபந்தனையுடன் கூடிய ஆதரவு வழங்க வுள்ளதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் அறிவித்துள்ளார்.

இலங்கையின் சமாதானப் பேச்சுவார்த்தை களில். தனித்தரப்பாக முஸ்லிம் பிரதிநிதிகள் கலந்துகொள்வதற்கு, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆவன செய்யும் பட்சத்தில், ஐக கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசுக்குத் தங்களது ஆதரவை வழங்குவதற்கு முஸ்லிம் காங்கிரஸ் முடிவு செய்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.



அத்துடன், ஜனாதிபதி முறையை ஒழித்து, இலங்கை அரசியல் யாப்பில் மாற்றங்கள் கொண்டுவரும் முயற்சிகளையும் ஜனாதிபதி கைவிட வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

இந்தநிலையில், தங்களது கோரிக் கையை ஏற்றுக் கொளளும் பட்சத்தில், அடுத்து கூடவுள்ள நாடாளுமன்ற அமர்வில் - ஐக்கிய மககள் சுதந்திர முனனணி அரசுக்கு முஸ்லிம் காங் கிரஸ் தனது ஆதரவை வழங்கும்.

இதேவேளை, எதிர்வரும் மாகாணசபைத் தேர்தல்களில் தனித்து போட்டியிடுவது என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முடிவெடுத துள்ளது.

இதன்படி, எதிர்வரும் மாகாணசபைத் தேர் தல்களில் - கண்டி, பதுளை தவிர்ந்த ஏனைய அனைத்து மாவட்டங்களிலும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடவுள் ளதாக அதன் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்தார்.

## மோதலில் மாணவர்கள் காயம்

பேராதனைப் பல்கலைக்கழகத்தில், மாண வர்களுக்கும் - ஓட்டோச் சாரதிகளுக்குமிடை யில் ஏற்பட்ட மோதலில், மூன்று மாணவர்கள் காயமடைந்தனர்.

பல்கலைக்கழக வளாகத்தினுள் மது போதையில் ஓட்டோ ஓட்டிவந்த நபர்கள் தாக கியதிலேயே இந்த மூன்று மாணவர்களும் காயமடைந்தனர்.

இதனையடுத்து, பேராதனைப் பல்கலைக் கழக மாணவர்கள் ஒன்றுதிரண்டு ஓட்டோக் காரர்களின் வீடுகளைத் தேடிச்சென்றுள்ளனர்.

அங்கு ஏற்பட்ட முறுகல் நிலையைத் தணிப்பதற்கு, அந்தப் பகுதிக்குப் பொலிஸார் விரைந்து சென்றதையடுத்து பிரச்சினை தவிர்க்கப்பட்டது. பல்கலைக்கழக வளாகத் தைச் சூழ பொலிஸார் பாதுகாப்பு நடவடிக் கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

## அரச உயர் பதவி நியமனங்கள் பற்றி தகவல் தரவும்

அரசாங்கத்தின் உயர் பதவிகளில் நிய மிக்கப்படுவோர் தொடர்பில் மக்கள் தகவல் தந்துதவுமாறு ட்ரான்பரன்சி இன்ரநஷனல் கேட்டுள்ளது.

அமைச்சுச் செயலர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் ஏனைய உயர் பதவி கள் தொடர்பாக இந்த வேண்டுகோள் விடுக் கப்பட்டுள்ளது.

ஏற்கனவே ஜனாதிபதி இந்த விடயத்தில் அதிக அக்கறையை வெளிப்படுத்தியுள்ள மையையும் ஜே.வி.பியினர் இந்த விடயத்தில் உறுதியாக இருந்தமையையும் ட்ரான்பரன்ஸி இன்ரநசனல் சுட்டிக்காட்டியுள்ளது.

## மகசீன் சிறைச்சாலையிலுள்ள கைதிகளின் விபரங்களை கிஷோர் எம்.பி.கோரியுள்ளார்

மகசீன் சிறைச்சாலையிலுள்ள தமிழ் அரசி யல் கைதிகளின் விபரங்களைத் தருமாறு, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வன்னி நாடா ளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் - சிறைச்சாலை ஆணையாளரிடம் கோரியுள்ளார்.

மகசீன் சிறைச்சாலையில் தடுத்து வைக் கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகளைப் பார்வையிடச் சென்றிருந்தவேளை, தேர்தல் ஆணையாளரிடம் கிஷோர் இந்தக் கோரிக் கையை முன்வைத்தார்.

இந்தச் சிறைச்சாலைக் கைதிகள் நீண்ட காலமாக விசாரணையின்றித் தடுத்து வைக் கப்பட்டுள்ளதாகவும், தமக்குக் கொலை அச் சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகவும் மற்றும் அடிப்படை வசதிகளின்றிப் பெரும் சிரமங்க ளைத் தாம் எதிர்நோக்குவதாகவும், தமது விடுதலை தொடர்பாக கவனஞ்செலுத்துமாறும் சிறைச்சாலைக் கைதிகள் வன்னி நாடாளு மன்ற உறுப்பினருக்கு தொலைநகல் அனுப்பி வைத்திருந்தனர்.

இவர்களது கோரிக்கைகளையடுத்து, கடந்த 11 ஆம் திகதி சிறைச்சாலைக்குச் சென்ற சிவநாதன் கிஷோர் - கைதிகள் எட்டுப்பேரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது கைதிகளில் ஒருவரான சற் குணராஜா - தாம் எட்டு வருடமாக விசாரணை களின்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், தமது விடுதலை தொடர்பாக உரிய நடவடிக் கைகளை எடுக்குமாறு கோரிக்கை விடுத்திருந் தார்.

இதனையடுத்து, சிறைச்சாலையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விபரங்களைத் தமக்குத் தருமாறும், இவர்களது கோரிக்கை தொடர்பாக ஜனாதிபதியுடன் பேச்சுக்களை நடாத்தி, உரிய வசதிகளைப் பெற்றுத் தருவ தாக சிவநாதன் கிஷோர் உறுதிமொழி வழங்கி யுள்ளார்.

(03)

## கனடிய தேர்தலில் போட்டியிட ஈழத்தமிழர் ஒருவர் தெரிவு



(கொழும்பு)

கனடிய நாடாளுமன்றத்திற்கான தேர்தலில் போட்டியிடுவதற்கு டேவிட் தோமஸ் எனற ஈழத்தமிழர் ஒருவர் தெரிவாகியுள்ளார்.

கனடிய நாடாளுமன்றத்திற்கான தேர்தலில் ஈழத் தமிழர் ஒருவர் போட்டியிடத் தெரிவாகியிருப்பது இதுவே முதல் முறையாகும்.

ஏப்ரல் 20 ஆம் திகதி, புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவர் ஜாக் லெய்ற்றன் உட்பட, கட்சியின் பல முக்கிய பிரமுகர்கள் பலர் கலந்துகொண்ட முன்மொழிதற் கூட்டத்தில், ஈழத்தமிழர் டேவிட் தோமஸ், சீன இனத்த வரான வலரி மாங் ஆகியோர் இம்முறை தேர் தலில் போட்டியிடத் தெரிவானார்கள். இவர் களில் வலரி - டொன்வலி கிழக்கிற்கும், டேவிட் தோமஸ் - டொன்வலி மேற்கிற்கும் தெரிவாகியுள்ளனர்.

தற்போது ஆளும் கட்சியாக இருக்கும் லிபரல் கட்சியின் தலைவர் போல் மாட்டின் மீது கடுமையான புகார்கள் எழுந்துள்ள நிலையில், எதிர்க்கட்சியான கன்சர்வேட்டிங் கட்சிக்கு ஆதரவு சற்று அதிகரித்துள்ளது. இருந்தாலும், புலம்பெயர்ந்து கனடாவில் குடி யேறிய அகதிகள் குறித்த விடயத்தில், இந்த கன்சர்வேட்டிங் கட்சி மிகவும் மோசமான எதிர்ப்பையே காட்டி வருகிறது.

அண்மையில் கன்சர்வேட்டிவ் கட்சி வெளி யிட்டுள்ள அறிக்கையில், விடுதலைப் புலிகள் கோரமான பயங்கரவாதிகள் என்றும், அவர் களை நிரந்தரமாகத் தடைசெய்வதுடன், கனடாவிலும், வட அமெரிக்கா முழுவதிலும் அவர்களது அனைத்து செயற்பாடுகளையும் தடுத்து முடக்கிவிடவேண்டுமென்று அரசுக்கு அழுத்தம் கொடுத்துள்ளது.

நாடாளுமன்றத்திலும் குடிவரவு விதிகளை மிகவும் கடுமையாக்க, ஆளும் கட்சிக்கு அழுத்தம் கொடுத்து வருகிறது இந்தக் கட்சி.

தற்செயலாக கன்சர்வேட்டிங் கட்சி ஆட் சிக்கு வரும் பட்சத்தில், கனடாவிற்குக் குடி பெயர்ந்துள்ள அகதிகள் குறித்த விடயத்தில் மிகக் கடுமையான விதிகளை நடைமுறைப் படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

புலம்பெயர்ந்து கனடாவில் வாழும் மக்க ளுக்கு புதிய ஜனநாயகக் கட்சியின் கொள் கைகள் மிகவும் சாதகமாக அமைந்துள்ளன என்று கருதப்படுகிறது.

## புலிகளுடனான சமாதானப் பேச்சு மூன்று மாதத்திற்குள் ஆரம்பமாகும்

### றெஜினோல்ட் குரே தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தை மூன்று மாதத்திற்குள் ஆரம் பிக்கப்படவுள்ளதாக இலங்கை அரசாங்கததின் பேச்சாளர் றெஜினோல்ட் குரே தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலை மையிலான அரசாங்கத்தின் முதலாவது பத்தி ரிகையாளர் சந்திப்பிலேயே றெஜினோல்ட் குரே தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததா வது -

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - இந்தப் பிரச்சினைக்கான தீர்வைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதற்கு ஆவலாக உள்ளார்.

விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்களுக் கான பேச்சுக்கள் - அடுத்த மூன்று மாதத்திற் குள் ஆரம்பிக்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்கள் தாமாகவே விலகுவதற்கு சந்தர்ப்பம்

(கொழும்பு)

கடமையிலிருக்கும் போதும் மற்றும் பயிற் சிக்காலத்தின்போதும் தப்பியோடியவர்களுக்கு, சட்டபூர்வமாக இராணுவத்திலிருந்து விலகுவதற்கு மீண்டும் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ள தாக, பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கை தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப் பிடப்பட்டுள்ளது. 2003 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதிககு முன்னர் இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களுக்கே இவ்வாறு சட்டபூர்வமாக பதவி விலக வாய்ப்பளிக்கப்படுகிறது.

இந்த திட்டம் இம்மாதம் 24 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை செயற்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கம்பஹா, கொழும்பு, களுத்துறை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு சட்ட பூர்வமாக பதவி விலக இதற்கு முன்னர் வாய்பபளிக்கப்பட்டது. அதன்போது பதவி விலக முடி யாமல் போனவர்களுக்கு மீண்டுமொரு வாய்ப்பளிக்கும் நிலையிலேயே இந்த சந்தர்ப்பம் வழங கப்பட்டிருக்கின்றது.

## பௌத்த பிக்குகள் அனைவருக்கும் அடையாள அட்டைகள் வழங்கப்படும்!

பௌத்த பிக்குகளின் அடையாளத்தை நிரூபிக்கவும், அவர்களது கௌரவத்தைக் காக்கவும், இலங்கையிலுள்ள அனைத்துப் பௌத்த பிக்குகளுக்கும் அடையாள அட்டை வழங்கப்படவுள்ள தாக புத்த சாசன அமைச்சு தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அமைச்சின் செயலாளர் டி.டபிள்யூ.அபேயவிக்கிரம தெரிவிக்கையில், ஏற்கனவே ஆட்பதிவுத் திணைக்களத்துடன் இணைந்து தமது அமைச்சு பதிவு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக தெரிவித்தார்.

பிக்குகள் இந்த திணைக்களத்திலிருந்து தமது விண்ணப்பங்களை இலகுவாகப் பெற்றுப் பூர்த்திசெய்து கொடுக்கலாமெனவும் அபேயவிக்கிர தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ், ஏற்கனவே 3200 புத்த பிக்குகளுக்கு அடையாள அட் டைகள் வழங்கப்படும்போது பிக்குகள் தமது அடையாளத்தை நிரூபிக்க வேண்டுமெனவும் அமைச்சு கேட்டுள்ளது. புள்ளி விபரங்களின்படி இலங்கையில் 31,100 பிக்குகள் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.



கிளிநொச்சிக்கு நேற்று வந்த நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் மற்றும் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் இருவரையும் அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் அழைத்து வருவதைப் படத்தில் காணலாம்.

## கட்சித் தலைவர்களின் கூட்டத்துக்கு நாடாளுமன்ற செயலாளர் அழைப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களுக்கான கூட்டமொன்று எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்த கூட்டம் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெறுமென, நாடாளுமன்ற செயலாளர் நாயகம் ப்ரியானி விஜேயசேகர தெரிவித்தார்.

எதிர்வரும் 18 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடவுள்ள தால், அது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தவே கட் சித் தலைவர்களின் கூட்டம் நடத்தப்படவுள்ளது.

இதேவேளை, நாடாளுமன்றம் கூடும் தினத்தில ஐக கிய மக்கள் சுதந்திர முன்னணியின் புதிய உறுப்பினர்கள் இருவர் சத்தியப்பிரமாணம் செய்துகொளளவுள்ளனர்.

ரட்ணசிறி விக்கிரமநாயக்க மற்றும் மேர்வின் சில்வா ஆகியோரே இவ்வாறு சத்தியப் பிரமாணம் செய்துகொள்ள வுள்ளனர்.

இதேவேளை, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட கிங்ஸ்லி இராசநாயகம் - தனது இராஜினா மாக் கடிதத்தை ஒப்படைத்துள்ளதாகவும் நாடாளுமன்ற செயலாளர் ப்ரியானி விஜேயசேகர தெரிவித்தார். இது தொடர்பாக தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்துள்ள தாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்

பொதுசன நூலகம்

# 2007 உலகக்கிண்ணப் போட்டியுடன் ஓய்வுபெறப் போகிறாராம் முரளிதரன்



"2007 ஆம் ஆண்டு மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெறவுள்ள உலகக் கிண்ணப் போட்டித் தொடரோடு, சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வுபெறுவேன்" என்று உலக சாதனை படைத்துள்ள சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் அறிவித்துள்ளார்.

2007 ஆம் ஆண்டு மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெறவுள்ள உலகக் கிண்ணப் போட்டியில் இலங்கை அணி வெல்லவேண்டும் என்று தான் மிகவும் விரும்புவதாகவும், அதற்கான தன்னுடைய பங்கை அணிக்கு அளிக்கக் கடுமையாகப் பாடுபடப்போவதாகவும் தெரிவித்துள்ள முரளிதரன், 'நான் கௌரவமாக ஓய்வுபெற விரும்புகிறேன். எங்கள் அணி உலகக் கோப்பையை வெல்லவேண்டும்... அந்த மகிழ்ச்சியான தருணத்தோடு நான் ஓய்வுபெறவேண்டும் என்பது என்னுடைய விருப்பம்' என்று கூறியுள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணி தற்போது சிம்பாப்பேயில் பயணம் மேற்கொண்டு, இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடி வருகிறது. இரு அணிகளுக்கும் இடையேயான இரண்டாவது டெஸ்ட் போட்டி இன்று புலவாயோவில் ஆரம்பமாகின்றது.

சென்றவாரம் ஹராரேயில் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில், சிம்பாப்வே வீரர் என்காலாவின் விக்கெட்டை வீழ்த்தியதன் மூலம், டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கெட்டுக்கள் வீழ்த்தி விக்கெட்டுக்களின் எண்ணிக்கையில் மேற்கிந்தியத் தீவுகளின் வீரர் கொட்னி வோல்ஷின் சாதனையை முரளிதரன் முறியடித்தார்.

தற்போது 521 விக்கெட்டுக்களுடன் முரளிதரன் முதலிடத்திலும், 519 விக்கெட்டுக்களுடன் கோர்ட்னி வோல்ஷ் 2 ஆவது இடத்திலும் 517 விக்கெட்டுக்களைப் பெற்று ஷேன் வோன் மூன்றாவது இடத்திலும் உள்ளனர். அவுஸ்ரேலிய அணியும் இந்த மாத இறுதியில் சிம்பாப்வே அணியை எதிர்த்து, சிம்பாப்வேயில் டெஸ்ட் தொடரில் ஆடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

"உலகசாதனை என்பது என்னைப் பொறுத்தவரையில் பெரிய விடயம்தான். எங்கள் நாட்டுக்கும அது பெருமை சேர்க்கும் விடயம் தான். ஆனால், உலகக் கிண்ணத்தை வெல்வது என்பது அதைவிட மதிப்பான ஒன்று.

1996 ஆம் ஆண்டு எங்கள் அணி உலகக் கோப்பையை வென்றபோது, நானும் அந்த அணியில் ஒரு வீரராக இடம்பெற்றிருந்தேன். அதுதான் எனது வாழ்வின் மிக முக்கியமான தருணம். தனிப்பட்ட சாதனைகள் எல்லாம் அதற்கு அடுத்தபடியாகத்தான்.

அத்துடன் ஒரு வீரரின் தனிப்பட்ட சாதனைக்கு ஆயுள் குறைவு. எப்படியும் எதிர்காலத்தில் அது முறியடிக்கப்பட்டுவிடும் தான். ஆனால், உலகக் கிண்ணப் போட்டிகளில் வெற்றிபெறுவது என்பது தனி... அந்தச் சாதனையை எதனோடும் ஒப்பிடமுடியாது என்பது எனது கருத்து என்று முரளிதரன் விளக்கம் அளித்துள்ளார்.

விக்கெட்டுக்களின் எண்ணிக்கையில் ஒருநாள் போட்டிகளிலும் மூன்றாவது இடத்தைப் பிடித்துக் கொண்டுள்ளார் முரளிதரன். பாகிஸ்தான் அணியின் முன்னாள் கப்டன்களான வாசிம் அக்ரம் 502 விக்கெட்டுக்களுடன் முதலிடத்திலும், வாக்கார் யூனுஸ் 416 விக்கெட்டுக்களுடன் இரண்டாவது இடத்திலும் உள்ளனர்.

இதுவரை 232 ஒருநாள் போட்டிகளில் ஆடியுள்ள முரளிதரன் - 360 விக்கெட்டுக்களுடன் மூன்றாவது இடத்திலுள்ளார். 2007 ஆம் ஆண்டுவரை முரளிதரன் சர்வதேச போட்டிகளில் நீடித்திருந்தால் ஒருநாள் போட்டிகளில் 500 விக்கெட்டுக்கள் என்ற இலக்கையும் எளிதில் எட்டிவிடுவார் என்று கிரிக்கெட் நிபுணர்கள் கருதுகின்றனர்.

# மயக்க நிலையிலேயே மரடோனாவுக்கு சிகிச்சை

(ஆர்ஜென்ரீனா)

ஆர்ஜென்ரீனா கால்பந்து அணியின் முன்னாள் பிரபல வீரர் டியகோ மரடோனாவுக்கு கடந்த மாதம் மூச்சுத் திணறல் ஏற்பட்டது. இதனால், புவனஸ் அயர்ஸில் உள்ள வைத்தியசாலையில் 12 தினங்கள் சிகிச்சைபெற்று வீடு திரும்பினார்.

கடந்த சில தினங்களுக்கு முன்பு அவர் அங்குள்ள சூய்கோ மருத்துவமனையில் போதை மருந்து புனர்வாழ்வு மையத்தில் மீண்டும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

தற்போது அவருக்கு மயக்க நிலையிலேயே சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக வைத்தியர்கள கூறும்போது, மரடோனா சுய நினைவுடன் இருக்கிறார். நிலமை கட்டுமீறிப் போகும்போது மயக்க மருந்து கொடுத்து சிகிச்சை அளிக்கப்படுகிறது. கியூபாவுக்குப் போக வேண்டும் என்ற அவரது விருப்பத்தை நிறைவேற்றும் சூழலில் அவரது உடல்நிலை இல்லை என்றனர்.

# இர்பான் பதான், பாலாஜிக்கு டெனிஸ் லில்லி பயிற்சி!

(பாகிஸ்தான்)

பாகிஸ்தான் சுற்றுப் பயணத்தில் புதுமுக வீரர்களான இர்பான் பதான், எல்.பாலாஜி ஆகியோர் பந்துவீச்சில் கலக்கினார்கள். இவர்களது அபாரமான பந்துவீச்சால் இந்திய அணிக்கு வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றி கிடைத்தது.

அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த முன்னாள் பிரபல வேகப்பந்து வீச்சாளர் டெனிஸ் லில்லி இவர்களுக்குப் பயிற்சியளிக்கவுள்ளார்.

எதிர்வரும் 28 ஆம் திகதி சென்னையில் உள்ள எம்.ஆர்.எப் பவுண்டேசனில் பயிற்சி தொடங்குகிறது. இதேபோல, காயம் காரணமாக பாகிஸ்தான் தொடரில் பாதிப் போட்டியில் ஆடிய சகீர் கானும் இந்தப் பயிற்சியில் பங்கேற்கிறார்.

# தூஸ்ரா பந்துவீச்சை மேற்கொள்ள வேண்டாம்

## முரளியிடம் கோரிக்கை

(புலவாயோ)

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் தூஸ்ரா என்ற இரண்டாம் நிலைப் பந்துவீச்சை மேற்கொள்ள வேண்டாம் என இலங்கையின் சுழற்பந்துவீச்சாளர் முத்தையா முரளிதரனிடம் இலங்கை கிரிக்கெட் சபை கேட்டுள்ளது.

இந்த தூஸ்ரா பந்துவீச்சுத் தொடர்பாக தொடர்ந்தும் விமர்சனங்கள் வெளியிடப்பட்டு வருகின்றமையால், அந்தப் பந்துவீச்சை மேற்கொள்ள வேண்டாம் என இலங்கை கிரிக்கெட் சபையால் முரளிதரனிடம் கேட்கப்பட்டுள்ளது.

இதனிடையே முரளிதரன் இனி, தூஸ்ரா முறையில் பந்துவீசக் கூடாது என்று நேற்றுமுன்தினம் ஐ.சி.சியும் அறிவித்துள்ளது. தூஸ்ரா முறையிலான அவருடைய பந்துவீச்சு - கிரிக்கெட் விதிகளுககு முரணானது என்றும், இனிமேல் அவர் தூஸ்ரா முறையில் பந்து வீசினால் அவருக்கு ஓராண்டுகாலம் சர்வதேச போட்டிகளில் ஆடத் தடை விதிக்கப்படும் என்றும் ஐ.சி.சி. நேற்றுமுன்தினம் திட்டவட்டமாக அறிவித்துவிட்டது.

ஐ.சி.சியின் இந்த அறிவிப்பையடுத்தே முரளிதரனிடம் தூஸ்ரா முறையில் பந்துவீசவேண்டாம் என்று இலங்கைக் கிரிக்கெட் சபை வேண்டுகோள் விடுத்தது.

தூஸ்ரா முறையிலான பந்து வீச்சு என்னுடைய பிரதான ஆயுதமல்ல. அந்த முறையை கிரிக்கெட் விதிகளுக்கு முரணானது என்று ஐ.சி.சி. அறிவித்திருப்பதில் எனக்கு மாறுபட்ட கருத்து இருந்தாலும், ஐ.சி.சியின் விதிமுறைகளை ஏற்று இனி தூஸ்ரா முறையில் பந்துவீசமாட்டேன் என்று முரளிதரனும் புலவாயோவில் செய்தியாளருக்கு அளித்த பேட்டியின்போது கூறியுள்ளார்.

# பங்களாதேஸுடனான தொடர்; காயத்தால் லாரா ஆடவில்லை!

பங்களாதேஷ் கிரிக்கெட் அணி 2 டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் விளையாடுவதற்காக கடந்த 9 ஆம் திகதி மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சென்றுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் இடையேயான முதல் ஒருநாள் போட்டி எதிர்வரும் 15 ஆம் திகதி கிங்ஸ்டனிலும், 2 ஆவது போட்டி 16 ஆம் திகதி கிங்டனிலும், கடைசிப் போட்டி 19 ஆம் திகதி சென். ஜோர்ஜ் மைதானத்திலும் நடைபெறவுள்ளது.


முதல் டெஸ்ட் மே 28 முதல் ஜூன் 1 ஆம் திகதிவரை செயின்ட் லூசிகாவிலும், 2 ஆவது டெஸ்ட் ஜூன் 4 - 8 ஆம் திகதிவரை ஜமேக்காவிலும் நடைபெறும்.

பங்களாதேஷ்"க்கு எதிரான முதல் இரண்டு ஒருநாள் போட்டிகளிலும் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் அணித்தலைவர் லாரா காயம காரணமாக ஆடவில்லை. அவருக்கு கைவிரலில் காயம் ஏற்பட்டது. இதனால், ராம்நரேஷ் சர்வான் முதல் இரண்டு போட்டிக்கு கப்டனாக இருப்பார். முதல் இரண்டு போட்டிக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணி வருமாறு -

சர்வான் (கப்டன்), கெய்ல், ஸ்மித், சந்திரபோல், சில்வர்ஸ்டார் ஜோசப், புரோவா, ஜேக்கப், பிராட்ஷோ, ராம் பவுல், எட்வர்ஸ், டினோ பெஸ்ட்.

# தனக்கேயுரிய இயல்பான ஆட்டத்தை டெண்டுல்கர் வெளிப்படுத்த வேண்டும்

## அசாருதீன் கூறுகிறார்



(கோழிக்கோடு)

"தனக்கேயுரிய இயல்பான ஆட்டத்தை டெண்டுல்கர் ஆடவேண்டும். சமீபகாலமாக டெண்டுல்கர் அதிகமாக தற்காப்புப் பணியைக் கடைப்பிடிக்கின்றார். அதை அவர் மாற்றிக்கொண்டு தன்னுடைய பழைய பாணி ஆட்டத்தைப் பின்பற்றி ஆடவேண்டும். மக்கள் அதைத்தான் அவரிடமிருந்து எதிர்பார்க்கிறார்கள்." என்று இந்திய அணியின் முன்னாள் கப்டன் முகமது அசாருதீன் நேற்று முன்தினம் கோழிக்கோட்டில் அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

டெண்டுல்கர் ஓட்டங்களைச் சேகரிக்கும் முறையில் தற்போது சிறிது மாற்றம் உள்ளது. முன்பு அவர் பந்துவீச்சாளர்களை அஞ்சாமல் எதிர்கொண்டு அதிரடிப் பாணியில் ஓட்டங்களைக் குவித்து வந்தார். ஆனால், தற்போது தற்காப்புப் பாணியைக் கடைப்பிடித்து ஆடுகின்றார். அதனால், அவர் ஓட்டங்கள் குவிக்கும் வேகம் சிறிது மந்தமாகியுள்ளது. அவர் பழைய பாணியில் ஆடவேண்டும் என்று மக்கள் விரும்புகிறார்கள்.... நானும் விரும்புகிறேன்.

முல்தானில் 194 ஓட்டங்களில் டெண்டுல்கர் ஆடிக்கொண்டிருந்தபோது, ராகுல் ராவிட் ஆட்டத்தை இடைநிறுத்தியது தவறுதான் என்பது என்னுடைய கருத்து. இரட்டைச் சதத்தை டெண்டுல்கர் பூர்த்தி செய்ய அவருக்கு அனுமதியளித்திருக்கலாம். ஆனாலும், இந்த விடயத்தை மேலும் சர்ச்சையாக்கக்கூடாது. ஆட்டத்தை இடைநிறுத்தியது அணியின் ஒட்டுமொத்த முடிவு என்று அனைவரும் கருத்து வேறுபாடு இல்லாமல் கூறிவிட்டார்கள். எனவே, இத்துடன் இந்த விடயத்தை விட்டுவிடலாம் என்று அசாருதீன் தனது பேட்டியினூடே கூறினார்.

தற்போதைய இந்திய அணி இதுவரை ஆடியுள்ள இந்திய அணியிலேயே சிறப்பான ஒன்றா? என்ற கேள்விக்குப் பதிலளித்த அஸாருதீன் -

"1985 ஆம் ஆண்டு சுனில் கவாஸ்கரின் தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணிதான் என்னுடைய பார்வைக்குச் சிறந்த அணியாக இருக்கின்றது. அப்போது அவுஸ்ரேலியாவில் நடைபெற்ற உலகத் தொடர் போட்டிகளில் ஒவ்வொரு அணிகளாகத் தோற்கடித்து இறுதிப் போட்டியில் பாகிஸ்தானையும் இந்திய அணி வீழ்த்தி கிண்ணத்தைக் கைப்பற்றிச் சாதித்தது. அந்த இந்திய அணியில் கபில்தேவ், றோஜர்பின்னி ஆகியோரின் வேகப்பந்துவீச்சும் சிவராமகிருஷ்ணர் மனீந்தர் சிங்கின் சுழற்பந்து வீச்சும் எதிரணியின் துடுப்பாட்ட வீரர்களை திணறடித்தது என்பதை இன்றளவும் நான் நினைத்துப் பார்க்கின்றேன். ஸ்ரீகாந், கவாஸ்கர் மற்றும் நான் உட்பட வலிமையான துடுப்பாட்ட வீரர்களும் அந்த அணியில் இடம் பெற்றிருந்தோம். மத்திய வரிசையில் வெங்சர்க்காரும், கபில்தேவும் தங்கள் பணியைச் செவ்வனே செய்ய அந்தத் தொடர் முழுவதுமே இந்திய அணி சிறப்பாக ஆடியது.

இந்திய அணியின் தற்போதைய கப்டன் கங்கூலி திறமையாகச் செயற்படுகிறார். அவர் சிறந்த கப்டன் என்பதை அவர் தலைமையின் கீழ் இந்திய அணி பெற்றுள்ள வெற்றிகள் கூறுகின்றன. எனவே, அவரது தலைமை குறித்து நான் எதுவும் தனியாக் கருத்துக் கூறத் தேவையில்லை என்று நினைக்கிறேன்.

டெஸ்ட் போட்டிகளில் யுவராஜ் சிங்கைத் துவக்க ஆட்டக்காரராக களமிறக்கலாம். துவக்க ஆட்டக்காரராக இடதுகை ஆட்டக்காரர் ஒருவர் ஆடுவது இந்திய அணிக்கு வலுச் சேர்க்கும் என்று அவர் மேலும் கூறினார்.

## அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள

# ஆஷஷ் கிண்ணத் தொடரை வெல்வதற்கு இங்கிலாந்து அணிக்கு வாய்ப்புள்ளதாம்

## ஸ்ரீவோ தெரிவிப்பு



மைக்கல் வோகன் தலைமையிலான இங்கிலாந்து கிரிக்கெட் அணி, அடுத்த ஆண்டு இங்கிலாந்தில் நடைபெறவுள்ள அவுஸ்ரேலிய அணிக்கு எதிரான ஆஷஸ் டெஸ்ட் தொடரைக் கைப்பற்ற வாய்ப்புள்ளது என்று அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் ஸ்ரீவோ கருத்து தெரிவித்தார்.

அண்மைக்காலமாக வோகன் தலைமையிலான இங்கிலாந்து அணி நன்றாக ஆடி வருகின்றது. 36 ஆண்டுகளுக்குப் பிறகு அந்த அணி மேற்கிந்தியத்தீவுகளில் டெஸ்ட் தொடரைக் கைப்பற்றி சாதனை படைத்துள்ளது. அவுஸ்ரேலிய அணிக்கு எதிரான ஆஷஷ் தொடரில் கடைசியாக இங்கிலாந்து அணி 1987 ஆம் ஆண்டு மைக் கேட்டிங் தலைமையில் வென்றிருக்கின்றது. கிட்டத்தட்ட 17 ஆண்டுகளுக்குப் பிறகு இங்கிலாந்து அணி கிட்டத்தட்ட இதே வலிமையோடு காணப்படுகின்றது.

அடுத்த ஆண்டு ஆஷஷ் தொடர் இங்கிலாந்தில் நடைபெறுவது இங்கிலாந்து அணிக்கு கூடுதல் பலமளிக்கும் விடயம்தான். சொந்த மண்ணில் இங்கிலாந்து அணி வீரர்கள் துடிப்போடு ஆடுவார்கள். இங்கிலாந்து அணியில் தற்போது இளம் வீரர்கள் பலர் அறிமுகமாகி நன்றாக ஆடி வருகின்றார்கள். அவர்கள் அனைவரும் ஆஷஷ் தொடருக்குள்ளாக தங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்வார்கள் என்பது நிச்சயம். எனவே, இங்கிலாந்தில் அவுஸ்ரேலியா அணிக்குக் கடுமையான சவால் காத்திருக்கின்றது என்று, ஸ்ரீவோ நேற்றுமுன்தினம் பி.பி.சிக்கு அளித்த பேட்டியில் கூறியிருக்கிறார்.

இங்கிலாந்து அணியில் தற்போது விக்கெட் எடுக்கக்கூடிய திறமையான இளம் பந்துவீச்சாளர்கள் இடம்பெற்றிருப்பதாகவும், குறிப்பாக ஸ்ரீவ் ஹார்மிசனின் பந்துவீச்சு தன்னை மிகவும் கவர்ந்துவிட்டதாகவும் தெரிவித்த ஸ்ரீவோ, இருப்பினும் ஆஷஷ் தொடரை வெல்ல வேண்டுமானால் இங்கிலாந்து அணி வீரர்கள் இன்னமும் கடுமையாக உழைக்க வேண்டும். குறிப்பாக தொடரின் முதல் போட்டியில் வெல்லும் அணிக்கு தொடரை வெல்லும் வாய்புக்கள் அதிகம் என்பதனால் முதல் போட்டியின் முக்கியத்துவத்தை உணர்ந்து களம் இறங்க வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைச் செயற்பாடுகளின் ஊடாக மாணவர்களிடையே பண்பு உருவாக்கப்படுகிறது

## பரிசளிப்பு விழாவில் ஓய்வுபெற்ற கல்விப்பணிப்பாளர் கந்தசாமி தெரிவிப்பு

(வடமராட்சி)

பண்பு என்பது கடையில் வாங்கக்கூடியதல்ல. பாடசாலையில் பல்வேறு அனுபவங்களினூடாக ஒருவரினுள் செறிந்து அச்செறிவின் ஊடாகவே பண்பு உருவாக்கப்படுகின்றது. பண்பு மாற்றமென்பது காலத்தோடு இணைந்து பாடசாலை செயற்பாடுகளினூடாக மாற்றம் பெற்று, நடத்தையில் மாற்றம் வேண்டும்.

இவ்வாறு கரவெட்டி மாணிக்கவாசக வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய ஓய்வுபெற்ற கல்விப் பணிபபாளர் க.கந்தசாமி தெரிவித்தார்.

அதிபர் இ.இராகவன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது-

முன்னேற்றமென்பது அனைத்து மாணவர்களுக்கும் எழுத, வாசிக்க தெரியவேண்டும். அது அனைத்து மாணவரிலும் பிரதிபலிக்கவேண்டும். நான் இங்கு படித்த காலத்தில் இது ஒரு ஆண்கள் பாடசாலையாக இருந்தது. இப்போது இது ஒரு கலவன் பாடசாலையாகயுள்ளது. பால்ரீதியாக பிரித்து மாணவர்களிடையே வித்தியாசத்தை உண்டுபண்ணாது, கலவன் பாடசாலையாக இருப்பதால் மிகச் சிறந்த விழுமியத்தைக் கொண்ட மாணவர்களை உருவாக்கமுடியும்.

ஆலயங்களுக்குப் பெரும்தொகையான பணத்தை செலவு செய்யும் எமது மக்கள் - பாடசாலைகளை கவனியாது விடுவது எமது சமூகத்தின் பெரும் குறையாக இருந்து வருகிறது. பாடசாலை அபிவிருத்திக்கும் பங்களிப்பு செய்வது எமது சமூகத்தின் பெரும் கடமையாகும்.

ஆரம்பப் பாடசாலைகள்தான் மனிதனின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றி வருகிறது. நாங்கள் பெரிய பதவிகளில் இருக்கின்றோம் என்றால் இது கற்பித்த ஆசிரியர்கள் கட்டுப்கோப்புடன் எம்மை வளர்த்ததுதான் காரணம்.

முற்காலத்தில் ஆசிரியர்கள் தெருவில் சென்றால் தெய்வத்தைக் காணபது போன்ற ஒரு மனச் சந்தோஷம். இன்று தெய்வீக அம்சம் பொருந்திய பல ஆசிரியர்களை நாம் சமூகத்தில் காண்கிறோம்.

எங்கள் பிள்ளைகள் போர் காரணமாக இழந்தவற்றில் மிக முக்கியமானது- பிள்ளைகளிடையே மாறிக் கொண்டு செல்லும் பண்பு. இது பிள்ளைகளிடையே வன்மைப் பண்பாக மாற்றமடைந்து செல்கின்றது. இதற்கு காரணம் பாடசாலைகள் அல்ல. பாடசாலையில் நடைபெறும் புற நிகழ்ச்சிகளின் அம்சங்களை கற்றுத் திறன்பெற பிள்ளைகளுக்கு நேரமின்மையே காரணமாகும். வெளியிடங்களில் புத்தகக் கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கு மாணவர்கள் செல்வதே நேரமின்மைக்குக் காரணமாகும். இந்நிலை மாறவேண்டும்.

திறமையான பிள்ளைகளை உருவாக்கவேண்டும். திறமையற்ற பிள்ளைகள் உருவாக அனுமதிக்கக்கூடாது. ஒவ்வொரு பிள்ளையிடமும் ஏதோ ஒரு திறமையை வளர்க்க வேண்டும். அதற்கான முழுப்பொறுப்பும் ஆசிரிய சமூகத்திடமே இருக்க வேண்டும்.

மக்கள் பெருந்தொகையான பணத்தைக் கோயில்களுக்கென்று செலவு செய்கிறார்கள். அதுபோல பாடசாலை அபிவிருத்தி மேம்பாட்டுக்கும் பங்களிப்பு செய்யவேண்டும. அதுவே சமூகத்தின் பொக்கிசமாக இருக்கும் என்பதை எமது சமூகம் மறக்கக் கூடாது என அவர் தெரிவித்தார்.

வடமராட்சி வலய கல்விப்பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம், பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.இராசேந்திரன், கோட்டக் கல்வி அதிகாரி கே.அம்பலவாணர், கரவெட்டி பிரதேச செயலர் க.கனகரட்ணம், வடமராட்சி கல்விக் கழகப் பொறுப்பாளர் கே.தாயகன் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றினர். (17)



கரவெட்டி மாணிக்கவாசக வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட வட-கிழக்கு மாகாண முன்னாள் கல்விப் பணிப்பாளர் க.கந்தசாமி - மாணவன் ஒருவனுக்கு பரிசளிப்பதையும், பாடசாலை பிரதி அதிபர் திருமதி மகேஸ்வரன் உரையாற்றுவதையும் காணலாம். (17)

# கல்வியியல் கல்லூரிக்கு இங்கிலாந்து விரிவுரையாளர்

யாழ்ப்பாணக் கல்வியியல் கல்லூரிக்கு இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஆங்கில விரிவுரையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்தைச் சேர்ந்த பற்ரீசியா கிறீன் செல்டிஸ் என்கின்ற பெண் விரிவுரையாளரே ஆங்கிலக் கற்கைநெறிக்கு நியமிக்கப்பட்டவராவார்.

யாழ்.கல்வியியல் கல்லூரிப் பீடாதிபதி பொறளையிலுள்ள தொண்டர் சேவை நிறுவனம் ஒன்றுக்கு விடுத்த வேண்டுகோளை அடுத்தே இந்த நியமனம் இடம் பெற்றுள்ளது.

இந்த விரிவுரையாளருக்கு தமிழ் மொழி பற்றிய அறிவும் வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (லெ)

# தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு தண்ணீர்த்தாங்கி

அண்மையில் மீளக்குடியமர்ந்த கோவிலாக்கண்டி, கைதடி, நாவற்குழிப் பகுதி மக்களுடைய குடிநீர்த் தேவையை நிவர்த்தி செய்வதற்கு தண்ணீர்த் தாங்கியொன்று யாழ். அரசாங்க அதிபரால் வழங்கப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு வழங்கப்பட்ட இந்த பவுசர் மூலம் இந்தப் பகுதி மக்களுக்கு குடிநீர் வழங்கும் சேவ்வ ஆரம்பிக்கப்படவுள்ளது. (24)

# மனித உரிமைகளைப் பாதுகாக்கின்ற பாரிய பணி ஊடகவியலாளரைச் சாரும்

## ஆணைக்குழுவின் செயற்திட்ட அதிகாரி

(யாழ்ப்பாணம்)

மனித உரிமைகளை மக்கள் விளங்கிக் கொள்வதற்கும், அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் ஊடகங்கள் துணிவுடன் செயற்படவேண்டும் என இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் இடம் பெயர்ந்தோருக்கான செயற்றிட்ட இணைப்பாளர் சேனக திஸநாயக்க தெரிவித்தார்.

நாவலர் கலாசார மண்டபத்தில் நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர்களுக்கு நடத்திய கருத்தரங்கிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது -

ஒரு நாட்டில் ஜனநாயகத்தையும், உண்மையையும் பாதுகாக்கும் பாரிய பொறுப்பு ஊடகவியலாளர்கள் கையிலே உண்டு. அவர்கள் ஒரு நடு நிலையாகச் செயற்படும் போதுதான் நாட்டில் நன்னெறி தழைத்தோங்கும்.

மனிதர்கள் அனைவருக்கும் உரிய உரிமைகளைப் பேணிப்பாதுகாப்பதில் ஊடகங்கள் பெரும்சிரமங்களையும் நெருக்குதல்களையும் அனுபவித்து வருகின்றமை அனைவரும் அறிந்த விடயமே. எனினும், எமது நாட்டில் எத்தனையோ கஷ்டங்கள் மத்தியிலும் ஊடகங்கள் உண்மைத் தன்மையைப் பேணி நீதியை நிலைநாட்டியுள்ளன.

கிருஷாந்தி குமாரசாமி கொலை வழக்கானாலும் சரி, தென்னிலங்கையில் ஒரு நடிகரால் மேற்கொள்ளப்பட்ட கொலை பற்றிய வழக்கானாலும் சரி அவற்றுக்கெல்லாம் சரியான தீர்வு கிடைத்தது ஊடகங்களின் தனித்துவமான சேவையாலேயே ஆகும்.

இலங்கையில் பாரிய பிரச்சினையாக இருந்து வருவது இடம்பெயர்ந்தோர் பிரச்சினையாகும். மீள்குடியேற்றம் என்பது சாத்தியமற்றதாகியுள்ளநிலையில், அவர்களுக்கான தொழில் வசதி, நிவாரண விநியோகம் முதலியவையாவது சுமூகமானநிலையில் இடம்பெற வசதி ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

இதற்கான அடிப்படைச்சேவைகளை நாம் செய்து வருகிறோம். அரசால் வழங்கப்பட்டு வரும் நிவாரணம் கூட அடிப்படை உரிமைகளுக்கான செயல். அது மறுக்கப்படுதல் மனித உரிமைமீறல் ஆகும்.

சாதாரண மக்கள் பலர் தமது பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தைப் பெறுவதிலோ அல்லது தேசிய அடையாள அட்டைகளைப் பெறுவதிலோ அக்கறை செலுத்தாமல் வாழ்ந்து வருகின்றனர். அவர்களது உரிமைகள் பலவற்றை இதனால் இழந்துபோகின்றனர். இதனை அவர்களுக்கு உணர்த்தவேண்டிய பாரிய பொறுப்பும் ஊடகவியலாளர்களுக்கும் உண்டு எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப,91)

# கிராம அலுவலர் இடமாற்றத்தை ரத்துச்செய்யுமாறு மறியற்போராட்டம்

## - சங்கானை பிரதேச செயலகம் ஸ்தம்பிதம்

(சங்கானை)

கிராம அலுவலர் ஒருவரை இடமாற்றம் செய்தமையைக் கண்டித்தும், குறித்த கிராம அலுவலரை மீண்டும் அதே இடத்திற்கு நியமிக்குமாறும் கோரியும், சங்கானை பிரதேச செயலகத்துக்கு முன்பாக நேற்றுமுன்தினம் மறியல் போராட்டமொன்று இடம் பெற்றது.

பொன்னாலை கிராம அலுவலர் பிரிவில் கடந்த 23 வருடங்களாக கிராம அலுவலராகக் கடமையாற்றிய வே.இரததினம் என்பவர் அந்தப் பிரிவிலிருந்து திடீரென இடமாற்றம் செய்யப்பட்டார். இந்த இடமாற்றத்தை விரும்பாத யா/170 கிராம அலுவலர் பிரிவில் வசித்த மக்களே இந்த மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த மறியல் போராட்டத்தினால் சங்கானை உதவி அரச அதிபர் அலுவலகப் பணிகள் ஸ்தம்பிதமாகின. குறிப்பாக வேலையற்ற பட்டதாரிகளைப் பதிதல், கிராம சேவையாளர் சந்திப்பு, மக்கள் கடமைகள் முதலியன பாதிக்கப்பட்டதுடன், நேற்றுமுன்தினம் பிற்பகல் வரை பிரதேச செயலகம் மூடப்பட்டே இருந்தது.

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசாமி - மறியல் போராட்டத்தில் ஈடபட்டவர்களுடன் தொலைபேசியில் உரையாடினார்.

பொதுமக்கள் தமது கோரிக்கையில் உறுதியாக இருந்தபோதும் சில நன்மைகள் கருதி பிரதேச செயலகத்தை மீளவும் இயங்க அனுமதித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப)

# ஓய்வூதிய நடைமுறை தொடர்பான பயிற்சிப் பட்டறை

ஓய்வூதியத் திணைக்களச் சுற்று நிரூப இல. 6/2004 இன் படி, ஓய்வூதிய முரண்பாடுகளைத் தீர்த்தல் சம்பந்தமான பயிற்சிப் பட்டறை- எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை யாழ்.மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஓய்வூதியத் திணைக்கள அதிகாரிகளால் நடாத்தப்படவுள்ள இந்தப் பயிற்சிப் பட்டறையில் ஒவ்வொரு பிரதேச செயலகத்தில் இருந்தும் கணக்காளருடன் ஓய்வூதியப் பகுதி எழுதுநர்கள் இருவரையும் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. கலந்துகொள்ளும் அனைவருக்கும் தேநீர் மற்றும் மதிய உணவும் வழங்கப்படவுள்ளது. (24)

# சாரணர்களுக்கான இருநாள் பயிற்சி

வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் இரு நாட்களாக சாரணி அணிததலைவர்கள், உபதலைவர்களுக்கும் இருநாள் வதிவிட பயிற்சி வழங்கப்பட்டது.

மாவட்ட சாரணிய ஆணையாளா ஆ.ஜெகநாதன் மேற்பார்வையில் இந்தப் பயிற்சி வழங்கப்பட்டது. இதில் [illegible] கொண்டனர். (17)

# தொழில்புரிய வசதி இன்மையால் மீள வன்னி திரும்பும் பொதுமக்கள்

(யாழ்ப்பாணம்)

தொழில் செய்வதற்கான வசதி இன்மையால் கோவிலாக்கண்டி, தனங்களப்பு பகுதிகளில் மீளக்குடியமர்ந்த மக்கள் மீண்டும் வன்னிக்குச் செல்லும்நிலை தோன்றியுள்ளது.

இந்தப் பகுதியில் வாழ்பவர்களில் பெரும்பாலானோர் கடற்தொழிலையும் விவசாயத்தையுமே மேற்கொண்டு வாழ்பவர்கள். எனினும் வன்னியில் வாழ்ந்து விட்டு மீண்டும் அந்தப்பகுதியில் குடியேறிய அவர்களுக்கு மிகுந்த ஏமாற்றம் அளிக்கும் வகையில் இராணுவத்தினரின் ஆக்கிரமிப்புச் செயற்பாடுகள் அமைந்துள்ளன. குறிப்பாகத் தனங்கிளப்பு, கோவிலாக் கண்டிப் பகுதியிலுள்ள கடல் நீரேரிப்பகுதி முழுவதும் உயர்பாதுகாப்பு என்ற போர்வையில் கடலுக்குள் பாரிய அணைபோடப்பட்டு மீன்பிடித் தொழில் புரிவது தடைசெய்யப்பட்டுள்ளது.

அத்தோடு, விவசாய காணிகள் யாவும் இராணுவக்கட்டுப்பாட்டிலும், வெடிபொருள் அபாயம் மிக்க பகுதியாகவும் இருப்பதால் பயிர்செய்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது.

இதனை அடுத்தே மீளக்குடியமர்ந்த மக்கள் பலர் தமது சொந்த இடங்களை விட்டு மீண்டும் வன்னிக்குத் திரும்பி வருவதனைக் அவதானிக்கமுடிகிறது. (ப)

# பெண்கள் அபிவிருத்தி குறித்து பண்பாட்டுமைய ஒன்றுகூடலில் மாதர் சங்கப் பிரதிநிதிகள் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாட்ட மகளிர் அபிவிருத்தி தொடர்பான பாரிய ஒன்றுகூடல் நிகழ்வொன்று நேற்றுமுன்தினம் பெண்கள் பண்பாட்டு மையத்தில் இடம்பெற்றது.

யாழ்.மாவட்டத்திலுள்ள சுகாதாரத் தொண்டர், விளையாட்டுத் துறை, கிராம முன்னேற்றச்சங்கம், மாதர் அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் முன்னேற்றச்சங்கம் உள்ளிட்ட சகல அமைப்புக்களையும் சேர்ந்த 200 இற்கும் மேற்பட்ட பெண்கள் இதில் பங்குபற்றினர்.

இந்த நிகழ்வில் முன்னெடுக்கப்படவுள்ள பெண்கள் அபிவிருத்தித் தொடர்பாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் விளக்கமளித்தார்.

ஆயிரம் பெண்களுக்கான வேலை வாய்ப்பை முதல்கட்டமாகப் பெண்கள் பண்பாட்டு மையத்தினூடாக வழங்கும் பொருட்டு நேற்றுமுன்தினம் 20 பெண்கள்-எழுச்சிப்படுத்துவோர் என்ற பெயரில் தெரிவுசெய்யப்பட்டனர்.

இவர்களினூடாக கிராம மட்டத்திலுள்ள பின் தங்கிய, பாதிக்கப்பட்ட பெண்கள் தெரிவுசெய்யப்பட்டு, வேலை வாய்ப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

பெண்கள் பண்பாட்டு மையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வில் - பத்மினி சிதம்பரநாதன் தன்னை நாடாளுமன்றிற்கு அனுப்பியவர்களுக்குத் தனது நன்றியறிதலையும் தெரிவித்தார்.

இதேபோன்ற பெண்கள் சங்க நிகழ்வுகள் பல இடம்பெறவிருப்பதாகவும், பெண்கள் அனைவரும் தமது சமூக கடமைகளை உணர்ந்து இவற்றில் கலந்துகொள்ளவேண்டுமெனவும் மேலும் அங்கு நடந்த கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்



# சிநேகிதியே



கவிஞர் சல்மா

என் அடையாளத்தை எழுத்தின்மூலம்தான் காட்டமுடியும். என்குடும்ப வாழக்கையுடன் என்னைத் தொலைத்துவிடவேண்டும் என்று நினைக்கவில்லை. இதுதான் என்னைத் தொடர்ந்து எழுதவைத்தது.

ஒரு மாலையும் இன்னொரு மாலையும் கவிதைத் தொகுப்பின் மூலமாக முக்கியம் பெற்ற கவிஞர் சல்மாவுடனான நேர்காணல் ~ உலகத் தமிழ் ஆண்டுமலர் 2003 இல் இடம்பெற்றது.

இந்த நேர் காணலின் முக்கியமான சில பகுதிகளை இங்கு தருகின்றோம்.

# பெண்கள் தங்களுக்கென்று சுயமான சிந்தனையை வளர்த்தெடுத்துக் கொள்ளவேண்டும்

பெண்களின் பொது வான துயரங்கள், தனது சொந்த அனுபவங்கள் இவற்றைக் கொண்டு கவிஞர் சல்மா கவிதைகளை இயற்றியுள்ளார். இவரது இயற்பெயர் ரொக்கையா பீடி என்பதாகும். இவர் சில கவிதைகளையும் 'இரண்டாம் ஜாமங்களின் கதை' என்ற நூலையும் எழுதியுள்ளார். இவர் திருச்சி மாவட்டம் துவரக்குறிச்சியைச் சேர்ந்தவர்.

வாசகர் நிலையிலிருந்து படைப்பாளர் தரத்திற்கு தற்போது வந்துள்ளேன். நான் 12 வயதிலேயே ஒரு கதை எழுதியிருந்தேன். கவிஞர் மனுஷ்ய புத்திரனோடு சேர்ந்து நிறைய நூல்களை வாசிப்பேன். நிறைய வாசித்ததன் மூலமாக எனக்கான மொழியை இனக்கண்டு கொண்டேன். அந்த இனங் காணல் மூலமாக எழுதத் தொடங்கினேன். வாசகர் நிலையில் இருந்தே எழுதத் தொடங்கி விட்டேன் என்றுதான் கூறவேண்டும்.

என்னுடைய இலக்கிய ஈடுபாட்டுக்கு என்னுடைய பெற்றோர் ஆதரவாகவே இருந்துள்ளனர். என்னுடைய எழுத்துக்களுக்கு வாசகர்களிடமிருந்து நிறையக் கடிதங்கள் வரும். அந்த கடிதங்கள் எனக்கு பெரிய பிரச்சினையாக இருந்தன.

எங்கள் ஊரில் கல்யாணமாகாத ஒரு பெண்ணுக்கு முகம் தெரியாத ஒருவரிடமிருந்து கடிதம் வந்தால் என்ன நடக்கும் என்பதை நினைத்தே பார்க்கமுடியாது. வாசகர்களிடமிருந்து கடிதம் வருகின்ற சூழலில் பெற்றோர் என்னைப் புரிந்துகொண்டு அதற்கான சுதந்திரத்தை எனக்கு கொடுத்தனர்.

என்னுடை அடையாளத்தை என் எழுத்தின் மூலமாகத்தான் காட்ட முடியும். என் குடும்பம், என் வாழ்கை என்பதோடு என்னைத் தொலைத்து விடவேண்டும் என்று நான் விரும்பவில்லை. இத்தகைய உணர்வுதான் தொடர்ந்தும் என்னை எழுதத் தூண்டிய வண்ணமுள்ளது.

என்னுடைய கவிதைகள் எல்லாப் பெண்களுக்குமான கவிதைகள் என்றே நான் உணர்கின்றேன். என் கவிதைகள் என்னுடைய அனுபவங்களைக் கொண்டு எழுதப்படுபவை என்றாலும், எல்லாப் பெண்களுக்குமான பொதுவான உணர்வுகளாக அவை இருக்கின்றன.

படிப்பவர்களுக்கு, பொதுவான தளத்துக்குச் செல்வதற்கு என் ஒவ்வொரு கவிதையும் இடந்தரவே செய்கின்றது என்ற நம்பிக்கை இருக்கின்றது.

எனக்கு நேராத அனுபவங்களும் என் கவிதைகளில் இருக்கவே செய்கின்றன. ஆரம்பத்தில் மதத்தின்மீது ஆழமான நம்பிக்கை எனக்கிருந்தது. பின்பு ரஷ்ய இலக்கியம், மார்க்சியம், லெனின் என்றெல்லாம் நிறைய வாசிக்க ஆரம்பித்த பின்பு எனது 16,17 வயதுகளில் மதத்தின் மீதான நம்பிக்கை போய் விட்டது. அந்த நம்பிக்கை இல்லை என்று காட்டிக்கொண்டதாலேயே நிறைய பிரச்சினையை எதிர்கொண்டேன்.

'ஒருமாலையும் இன்னொரு மாலையும்' தொகுப்பு முன்னுரையில் மொழியின் போதாமை பற்றிச் சொல்லியிருக்கின்றேன்.

பெண்ணிற்கான மொழி இன்னும் வீரியத்துடன் வெளிப்படவேண்டுமென்ற கருத்து எல்லோருக்குமே இருக்கின்றது. ஆனால், நம்மிடம் இருக்கும் மொழியை முழுமையாகப் பயன்படுத்தியுள்ளோமோ என்ற கேள்வியை எழுப்பிகொண்டால் - இல்லை என்ற பதிலையே நான் இப்போது சொல்லவிரும்புகின்றேன்.

ஆனால், அதை நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றேன் என்றுதான் சொல்லவேண்டியுள்ளது என்ற நிறைவின்மை இருக்கின்றது.

பெண்களுக்கான மொழியை பெண்கள் தான் உருவாக்கவேண்டும். இன்றைய மொழி ஆணின் சிந்தனைக்கேற்ற மொழியாகத்தான் இருக்கின்றது. பெண்கள் சிந்திப்பதுகூட ஆணின் சிந்தனைக்கேற்ற மொழியாகத்தான் இருக்கின்றது. பெண்கள் சிந்தித்திருப்பதுகூட ஆணின் சிந்தனை முறையை ஒட்டித்தான் வருகின்றது.

ஆணின் சிந்தனையை இரவல் வாங்கித் தான் பெண்ணும் சிந்திக்கவேண்டியுள்ளது.


பெண்கள் தங்களுக்கென்று சுயமான சிந்தனையை வளர்தெடுத்துக்கொள்ளவேண்டும். நடைமுறை வாழ்க்கையை வைத்துகூட இதை விளக்கமுடியும். ஒரு ஆண் வரதட்சணை கேட்கும் அதேநேரம் பெண்ணும் கேட்கிறாள். மகனுக்குத் திருமணம் செய்யவிருக்கும் அம்மா வரதட்சனை கேட்பதில் மகனுடன் போட்டி போடுகிறாள்.

திருமணமான பின்பு அவள் இருக்கும்வரை அவளை வைத்துச் சாப்பாடு போடுகிறோம், காப்பாற்றுகிறோம்.

அதற்காகக் கொடுக்கப்படும் சிறிய தொகைதான் நீங்கள் கொடுப்பது என்றெல் லாம் ஒரு பெண்தான் சொல்கிறாள். இப்படிப் பேச வைப்பது ஒரு ஆணின் சிந்தனைதான்.

இப்படியான சிந்தனைகளிலிருந்து வெளி வரும்போதுதான் பெண்ணுககான முழுமையான சிந்தனைவரும்.

# தாய் சேய் நலம்



பச்சிளங்குழந்தைகள் நன்றாக வளர தாய்க்கு நல்ல உணவு தேவை. சிறு குழந்தைகள் நோய்வாய்ப்பட்டு இறப்பதற்கு முக்கிய காரணம் வேண்டிய அளவிற்கு ஊட்டச்சத்துள்ள உணவு இல்லாமையே. முன்னேறிக் கொண்டிருக்கும் மூன்றாவது உலகத்தில் சிறு குழந்தைகள் இறப்பதற்கு முக்கியக் காரணம் தாய்மார்களுக்கு வேண்டிய தேவையான உணவு இல்லாமையே. இலங்கை மக்கள் தொகையில் பெரும்பாலான மக்கள் ஏழைகளாகவே வாழ்கின்றனர். அவர்களுக்கு உணண உணவில்லை. உடுக்க உடையில்லை. தங்குவதற்கு வீடில்லை. இவ்வாறு வாழும் மக்களுக்கு உணவும் வேண்டிய அளவு கிடைப்பதில்லை. இந்தநிலையை ஆராயும்பொழுது, கர்ப்பிணித்தாய்மார்கள், பால் கொடுக்கும் தாய்மார்கள் மற்றும் 12 வயது வரையுள்ள குழந்தைகள் ஆகியோருக்குப் பாதுகாப்பு தகுந்த உதவிகள் ஆகியவை நேரிடையாகவே அரசாங்கத்தால் வழங்கப்படவேண்டும்.

பொதுவாகப் பெண்களுக்கு அதிகளவு உணவு தேவை. கருத்தரிக்கும் முன்னரே வளர்ச்சியின் உச்சக்கட்டத்தை அடைந்திருக்கவேண்டும். இதனால் தான் பெண்களுக்குச் சிறுவயதிலே திருமணம் செய்வதை நாம் ஆதரிக்கவில்லை. உணவின் அளவு மட்டும் உயர்ந்து பயனில்லை. உணவின் தரமும் உயர்வாக இருக்கவேண்டும். ஒரு பெண்ணுக்குத் தினமும் 2000 கலோரி தேவையென்றால், குழந்தை உருவான கர்ப்பிணிகளுக்கு 2300 கலோரி உணவுதேவை. தாயின் வாழ்க்கை சுற்றுப் புறத்தையும் அவர்களது கலாசாரத்தையும் பொறுத்திருக்கிறது. அது போல், வீட்டில் வசிக்கும் பெரியவர்களின் அறிவுரைகளும், கர்ப்பகாலத்தில் தன்னைக் கவனிக்கும் மருத்துவர்களின் அறிவுரைகளும் மிகவும் அவசியம். எம்மைப் பொறுத்தவரையில் 2300 கலோரிக்குப் பதிலாக 1400 கலோரி உணவுதான் கிடைக்கிறது என்று கணிப்பீடு. தாய்க்கு அதிக உணவு கிடைக்கவில்லையென்றால் வயிற்றில் இருக்கும் குழந்தை நன்றாக வளராமலேயே பிரசவகாலம் முடிந்து விடுகிறது. ஆகவே, குறைமாதக் குழந்தை உருவாகிறது.

மனிதன் பிறக்கும் பொழுது சாதாரண நாட்களில் பிறந்தால்கூட குறைப்பிரசவமாகத்தான் பிறக்கிறானோ என நாம் எண்ணுகிறோம். ஏனென்றால், ஆடுகள், மாடுகள், கோழிகள் பிறந்தவுடன் தாமாகவே நடந்து சென்று உணவைத் தேடிக் கொள்வதைப் பார்க்கிறோம். பறவைகள் உடனேயே பறந்து திரிய ஆரம்பிக்கின்றன. ஆனால், மனிதன் மட்டும் பிறந்தவுடன் நடக்க முடியாமல், பேசத் தெரியாமல் அழுகிறான். வேறொரு மனிதன்தான் அக் குழந்தையை வாரி எடுத்து வேண்டியதைச் செய்யவேண்டும்.

இந்த உலகத்தின் வெப்பக்காற்று பிறந்த குழந்தைக்கு ஒத்துக்கொள்வதில்லை. உடம்பை மறைக்கத் துணி இல்லையென்றால் இயற்கையால் அல்லல்பட்டு நோயாளியாகின்றனர். ஆடு, மாடுகளுக்கு இவையெல்லாம் தேவை கிடையாது. ஆகவே, மனிதன் பிறக்கும்போது குறைமாதக்குழந்தையாகவே தோன்றுகிறான் என்பது தெள்ளத்தெளிவாகிறது. (தொடரும்...)

# சிநேகிதிக்கு ஒரு மடல்



அன்புள்ள சிநேகிதியே

என் நாளும் உன் நலன்களுடன் உன் பிரிய சிநேகிதி எழுதுகிறேன்.

உனது சமூக பண்பாட்டுக் கோலங்கள் நெகிழ்வுத் தன்மை உடையவை என்றும், அதனால் ஆரோக்கியமான குடும்ப உறவு பேணப்படுவதாகவும் நீ எழுதிய மடலை வாசித்தபோது என் நெஞ்சில் நெருடிய சில விடயங்களை உனக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

புரிந்துணர்வில் தான் குடும்ப உறவு இனிக்கின்றது என்கின்ற உனது கருத்துக்கு மாற்றுக்கருத்தில்லை.

ஆனால், புரிந்துணர்வை ஏற்படுத்தக்கூடிய சந்தர்ப்ப சூழ்நிலைகள் நீ வாழும் சூழலில் உண்டா என்பது வினாக்குறியாகவே இருக்கிறது. மலர்ந்த மறுநிமிடமே வாடிவரும் மலர்கள்போன்று, விவாகரத்திலே முடிந்து போன எத்தனையோ குடும்பங்கள் உனது கலாசாரத்தில் தோன்றக் காரணம் யாது?

இயந்திர வாழ்க்கையின் இரும்புப் பிடிக்குள் சிக்கிய மனிதனின் உள்ளத்து வெறுப்புக்களே விவாகரத்திலே போய் முடிகின்றன. கணவனும், மனைவியும் ஒரு வீட்டில் வாழ்ந்தபோதும், மணித்துளிகளைக் கணக்குப் பார்த்துப் பேச வேண்டியுள்ள உனது சூழலில் எவ்வாறு புரிந்துணர்வு ஏற்படும்.

அடுத்து இன்று மேற்கத்திய கலாசாரத்திலே சிறுவர்கள் மத்தியில் வன்முறைக் கலாசாரம் பரவிவருகின்றதன் காரணம் யாது?

பாடசாலை மாணவர்கள் தம் சக மாணவர்களையும் ஆசிரியர்களையும் சுட்டுக்கொன்ற சம்பவங்களின் பின்னால் தொக்குநிற்கும் வக்கிர மனப்பாங்கின் மூலவேர் என்ன தெரியுமா? அந்தச் சிறார்களுக்கு உரிய தாயன்பு கிடைக்காமையே ஆகும். இத்தனையையும் உருவாக்குவது உனது சமூக வாழ்க்கை முறைமைகளேயாகும். என்பதை உணர்ந்துகொள்.

கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன் எனப் பெண்ணினது மன உணர்வுகளுக்கு எமது சமூகம் கட்டுப்பாடு போடுவதாக ஒரு குற்றசாட்டு உன் மடலில் காணப்பட்டது. இது மன உணர்வுகளுக்கான கட்டுப்பாடன்று. மனப்பக்குவத்திற்கான ஒரு வழிப்படுத்தலே.

ஒரு கணவன் (கல்+ஆன்) கற்காதவனாக இருந்தாலும், (புல்+ஆன்) அன்போடு அரவணைக்காதவனாக இருந்தாலும், அவனுடன் கூட இருந்து அவனை நெறிப்படுத்த வேண்டிய பொறுப்பு மனைவிக்கு உண்டு என்பதையே இது சுட்டிக்காட்டுகின்றது. இதைத்தான் நமது பண்பாட்டிலே தாரம் என்பர்.

எமது பண்பாடு மனைவி என்ற உன்னத பாத்திரத்தைப் பற்பல உறவுகளிலே காணமுற்படுகின்றது. தாயாக, நண்பியாக, சகோதரியாக என மனைவி என்ற உன்னத உறவு எமது கலாசாரத்திலே அணுகப்படுகின்றது.

வேண்டாம் என்றால் தூக்கிவீசுவதற்கு இது ஒன்றும் சடப்பொருள் அல்ல. உள்ளங்களின் இணைவால் உருவான உறவை உயிரினும் மேலாகப் போற்றுவது எம் பண்பாடு. ஐரோப்பிய ஆடம்பரக் கலாசாரத்தில் வாழும் உனக்கு இது புரிவது சற்றுக்கடினம் தான். நண்பியே நாம் இன்று நாமாக இருப்பதற்கு நமது பண்பாட்டு, கலாசார விழுமியங்களே காரணமாகும்.


நான் ஏதோ அதிகம் எழுதிவிட்டதாகத் தோன்றுகின்றது. அதனால் இத்துடன் இம் மடலை நிறுத்தி உனது மடலை மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறேன்.

அன்புள்ள சிநேகிதி - நீலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிஞ்சுமுகத்தின் தேடல்

என் கைகள் நோவெடுத்தன. இன்னும் நீண்ட தூரம்போகவேண்டும். வீட்டிலிருந்து புறப்படும்போதே சகுனம் சரியில்லை. ஒரு நிமிட நேரத்திலை பஸ்ஸை விட்டிட்டன். இனி அடுத்த பஸ் இரண்டு மணி நேரத்துக்குப் பிறகுதான் வரும். எனவே நடந்துபோவதே நல்லது என்ற முடிவேடு நடக்கத் தொடங்கிவிட்டேன். கையிலே நான் கொண்டு வந்த மூட்டை பிணமாய்க் கனத்தது.



என்ரை நடையும் இப்ப தளரத் தொடங்கிவிட்டது. என்ரை பயணம் பற்றி நினைக்கும்போது எனக்கு நெஞ்சில் ஒரு அடைப்பு வந்தது. இடம்பெயர்ந்து... எத்தனையோ கஷ்டப்பட்டு இந்த ஊரிலை நானும் என்ரை மனுசியும் இப்ப ஒரு வருஷமா இருந்தம். என்ரை மனிசியைப் பற்றி நினைக்க எனக்கு எல்லாப் பொறுப்பையும் ஏற்று என்னோடு 45 வருஷம் கூட இருந்தவள். மூன்று நாள் காய்ச்சலில் போய்ச் சேர்ந்துவிட்டாள். அவள் போனது எனக்கு எல்லாமே போய்விட்டதுபோல. என்ரை அதட்டல்களையும், அதிகாரங்களையும் பொறுத்துக்கொண்ட புண்ணியவதி அவள். நான் ஒரு காலத்திலை காற்சட்டை போட்டு கவுண்மன்ரிலை உத்தியோகம் பார்த்தவன். எனக்கு கீழை வேலை செய்தவர்களை மேய்க்கிற பழக்கத்திலை வீட்டிலையும் வந்து மனுசியை விரட்டுவன். ஆனால், அவளோ முகஞ்சுழியாமல் என்னைக் கண்ணை இமை போலக் காத்து நின்றதை இப்போதுதான் உணர்கிறேன். எங்களுக்குப் பிள்ளைகள் பிறக்கவில்லை. ஆனால், ஊரிலை இருக்கும் பிஞ்சுகள் எல்லாம் எங்கடை வீட்டிலை தான்.

இந்த ஊருக்கு வந்தபிறகு இந்தச் சிறார் பராமரிப்பில் என்ரை மனுசி மும்முரமாயிருந்தாள். நாங்கள் இருந்த வீட்டிற்குக் கிட்ட ஒரு அகதிமுகாம். அங்கே முப்பதுக்கு மேறபட்ட குடும்பங்கள். நண்டும் சிண்டுமாய் பல குழந்தைகள். அந்தக் குழந்தைகளை எனக்குப் பிடிக்காது. கண்டால் ஒரு வெறுப்பு. ஆனால், என்ரை மனுசிக்கோ அந்தக் குழந்தைகள் என்றால்போதும். தொடக்கத்திலை அவளுக்குச் சொல்லிப்பாத்தன். "உதுகள் எல்லாம் கள்ளப்படையள்" உதுகளை அண்டக்கூடாது. இந்த விடயத்தில்தான் என்ர மனிசி என்னை மதிக்கவில்லை. அவள் தன்ரை எண்ணப்படிதான் நடக்கத் தொடங்கினாள். எனக்கு வந்த கோபத்திலை ஒருநாள் அவளுக்குக் க்கைநீட்டிப் போட்டன். அவள் அதுக்குப் பிறகு என்னோடை கதைக்கிறதில்லை. ஆனால், என்ரை சாப்பாடு எல்லாம் செய்துவைப்பாள். ஒரு நாள்...

நான் வாசிகசாலையிலை போயப் படிச்சுப் போட்டுத் திரும்பி வாற நேரம். வழியிலை அகதி முகாமிலை ஒரு களேபகரம். கூச்சலும் ஏசலுமாய் எனக்கு வெறுப்பாக இருந்தது. கசிப்புக் குடிச்சுப் போட்டுக் கழுதையள்... நான் மனதுக்குள்ள எண்ணிக்கொண்டு வந்தன். எங்கடை வீட்டு முற்றத்திலை 3 சின்னன்கள் நிக்குதுகள். எல்லாம் களிசானோடை. அழுது கொண்டு நிக்குதுகள். மனிசியைக் காணயில்லை. உள்ளை போய்ப் பார்த்தன். சமைக்கிற கொட்டிலுக்கை குரக்கன் புட்டு மணத்தது. எட நேற்று நான் வாங்கிக் கொண்ட குரக்கன் மாவிலை அவிச்சிருக்கிறாள். கத்தரிக்காயும், வெங்காயமும், பச்சை மிளகாயும் போட்டு அவிச்சிருக்கு. எனக்குப் பசி வயித்திலை புரண்டு வந்தது. கிணத்தடியிலை போய் முகத்தைக் கழுவிக்கொண்டுவந்து சாப்பிடுவம் எண்டு கொடியிலை கிடந்த துவாயை எடுத்துத் தோளிலை போடப் பல்லி சொல்லிச்சுது. எனக்குக் கொஞ்சம் யோசனையாகத்தான் இருந்தது... சரி வாறது வரட்டும் முகத்தைக் கழுவிக்கொண்டு விபூதியைப் பூசிக்கொண்டு வந்தபோது நான் கண்ட காட்சி... கொட்டிலுக்கை சாக்கு விரிச்சு அதிலை அந்த மூண்டு நட்டுவக்காலிகளும் குந்தியிருந்து குரக்கன் புட்டை அள்ளியள்ளி அடைஞ்சு கொண்டிருந்ததுகள். எல்லாத் தின்ரை கண்ணாலும் கண்ணீர் வடிஞ்சு கொண்டிருந்தது. என்ரை மனுசியும் அழுது கொண்டிருந்தாள். அதிலை சின்னனுக்குப் புரைக்கேற நான் ஓடிப்போய் முதுகிலே தடவினன். மனுசி தண்ணியைக் குடுத்தாள். அது வாங்கிக் குடிச்சுப் போட்டு தன்ரை அரிசிப்பல்லைக் காட்டி இளிச்சுது. அசல் குரங்குக் குட்டிபோல... இல்லை! அப்பிடிச் சொல்லக் கூடாது. மூண்டும் சாப்பிட்டு முடியக் கையைக் கழுவின. மனுசி விறாந்தையிலை பாயை விரிச்சாள். ஆச்சரியம்! ஆனால், உண்மை மூண்டும் படக்கெண்டு படுத்துச் சடக்கெண்டு நித்திரையாப் போச்சுதுகள். மனுசி கொஞ்ச நேரம் அதுகளைப் பார்த்துக் கொண்டிருந்தாள். தன்ரை சீலை ஒண்டை எடுத்துப் போர்த்துவிட்டாள்.

அதுக்குப் பிறகு எங்கடை வீட்டிலை கோழிக் குஞ்சு பொரிச்சது போலை ஒரே சத்தம்தான். எங்கடை மௌனக்கலகமும் தீர்ந்துவிட்டது. தாயும் தந்தையும் இல்லாத அந்த மூன்று சிறுவர்களும் எங்கடை வீட்டில்தான். மூத்தவனுக்கு 5 வயது நடுவிலானுக்கு 4 வயது. இளையவனுக்கு 3 வயது. இது எங்கடை வயதுக்கணிப்பு. அந்த இராசகுமாரகள் வந்தபிறகு எனக்கும் என்ரை மனுசிக்கும் 10 வயது குறைந்துவிட்டது. அந்தப் பிஞ்சு முகங்களின் மலர்ச்சியும் துள்ளலும் எங்களையும் தொற்றிக் கொண்டது. அதுகளின்ரை பேரைக்கேட்டால் சொல்லத் தெரியவில்லை. தாய் தந்தை யாரென்றும் தெரியவில்லை. இளையவனை உன்னுடைய அப்பா ஆரெண்டு கேட்டன். அது சுட்டு விரலால் என்னைக் காட்டியது. நான் திகைத்துப் போனேன்.... முகம் தெரியாத தகப்பனை அது என்ரை முகத்திலை தேடுது.

நானும் மனிசியும் அந்தச் சிறாருக்கு சேரன், சோழன், பாண்டியன் எண்டு பேர் வைச்சம். அகதிமுகாம் பக்கம் போய் இப்போது நான் அக்கறையுடன் அந்தப் பிள்ளைகளின் பெற்றோர் பற்றி விசாரித்தேன். ஒருவரும் சரியான பதில் தரவில்லை. 'அநாதைகள்' எண்டு சொன்னார்கள். எனக்கு முதன் முதலாக நெஞ்சு வலித்தது. நாங்கள் அந்தக் குழந்தைகளைப் பராமரிப்பது எப்படி என்ற கேள்வி என்னுள்ளே எழுந்தது. என்ரை பென்சன் காசிலை வளர்க்கலாம். எண்டு மனிசி சொன்னாள். மரவள்ளியும், கத்தரியும் பூசனியும் நட்டுத் தண்ணீர் ஊற்றினாள். சின்னன்களும் சேர்ந்து தண்ணீர் ஊற்றின. நானும் மண்வெட்டி பிடிச்சுக் கொத்திப் பாத்தி கட்டினன். எங்கடை முயற்சியால் வாடகைவீட்டு முற்றமும், சுற்றுப்புறமும் தோட்டமாகப் பச்சைப்பசேலென மாறின. அங்கே இந்த மூவேந்தன்களும் ஓடியாடித் திரிந்தார்கள். திடீரென்று எல்லாமே தலைகீழாயிற்று. மனிசி போய்விட்டாள். அவளின்ரை செத்தவீட்டிலை இந்த மூவேந்தரும் முழுசிக் கொண்டு நின்றார்கள். கையில் பந்தத்துடன் சொந்தக்காராய் மனிசியின் கால்மாட்டில் நின்றார்கள். எனக்குப் பார்க்கப் பொறுக்கவில்லை.... சுடலையாலை வந்த பிறகு நான் அந்த மூவேந்தர்களையும் காணவில்லை. ஒரு மாதம் கழிந்துவிட்டது. நான் இருந்த வீட்டுக்காரர் வெளிநாட்டிலை இருந்து வந்தினம். வீட்டை வித்தினம் என்னை ஒரு கிழமையிலை வெளிக்கிடச் சொல்லிச்சினம். சொந்தக்காரர்தான். ஆனால், எட்டியே நின்றார்கள். நான் மீண்டும் தனிய.. எதை... எடுப்பது. கொஞ்சம் உடுப்பு, புத்தகங்கள் சமையல் பாத்திரங்கள் இரண்டு மூட்டை தோளிலை சின்னப்பை... இனி எழும்பி நடப்பம். மூட்டையை இரண்டு கையிலெடுத்துத் தோளிலை வைச்சுக்கொண்டது. மற்றது மற்ற மூட்டையைச் சுமந்தது. சின்ன விரல்கள் வந்து என்கைகளைப் பற்றின. எட! மூவேந்தர்கள்... என்னால் நம்பமுடியவில்லை. அவர்கள் வழிகாட்ட நான் நடந்தேன். மனதில் மகிழ்ச்சி மழையாக வந்து இறங்கிற்று.

**மனோன்மணி சண்முகதாஸ்.**

# கணவன் - மனைவி உறவு

கணவனும், மனைவியும் சண்டையிடுவதற்கான காரணங்களில் முதலிடம் வகிப்பது வார்த்தைப் பிரயோகங்கள் தான். காசு, பணம், சந்தேகம் போன்றவை எல்லாம் அடுத்த கட்டங்கள்.



உச்சரிக்கப்படும் அந்த கணமே காற்றில் கரைந்து போகிற வார்த்தைகள் கணவன் - மனைவி உறவில் விரிசல் வளர்வதற்கு முதல் காரணமாகின்றன. வெறும் வார்த்தைகள் தம்பதியினரை நீதிமன்றம்வரை கொண்டு சென்றிருக்கின்றன. இந்த வெறும் வார்த்தைகள் தான் பல தம்பதியினரை ஒரே வீட்டுக்குள் அந்நியர்கள் போல வாழவைத்துள்ளது.

இன்று பல வீடுகளில் நடப்பது என்ன? கணவனும்-மனைவியும் இரத்தம் சிந்தும் வரை ஒருவரை ஒருவர் வார்த்தைகளால் காயப்படுத்திக் கொள்கிறார்கள்.

சிந்தித்துப் பார்த்தால், விசித்திரமாகக்கூட இருக்கிறது. மனித குலத்தின் அறிவு, ஆற்றல், வளர்ச்சி ஆகியவை வளர வளரத்தான் விவாகரத்து விகிதமும் அதிகரித்துச்செல்கிறது. இதற்கு காரணம் என்ன? வீடுகளில் அறிவு சார்ந்து சிந்திப்பதை நிறுத்திவிட்டமை தான். உறவுகளை எப்படிப் பலப்படுத்துவது என்று தெரிந்தவனால்தான் எந்தத் தடையையும் எளிதாகத் தாண்டிச் சென்று தொழிலில் முன்னுக்கு வரமுடியும். அவனுடைய தொழில் சம்பந்தமான உறவைப்பேணும் அறிவு 65 சதவீதம் தேவைப்படுகிறது என்று அமெரிக்காவிலுள்ள ஹவாட் பல்கலைக்கழகம் ஆய்வொன்றின் மூலம் வெளிப்படுத்தியுள்ளது.

தொழில் செய்யும் இடத்தில் உறவுகளைப் பேணும் அறிவு இவ்வளவு முக்கியத்துவம் பெறுகிறது என்றால், வீட்டில் இதயத்திற்கு இதம் தரும் உறவுகளைப்பேணும் நுட்பஅறிவு எந்தளவு முக்கியம்? சிந்தித்துப் பாருங்கள்.

ஒருவர் தவறு செய்திருந்தாலும் 'நீ செய்தது தவறு' என்று ஒரு போதும் கூறாதீர்கள். மாறாக 'எது சரி' என்று அமைதியாகக் கூறுங்கள். இது அலுவலக நடைமுறைக்கு மட்டுமல்ல, இல்லத்தின் இனிய உறவுக்கும் நல்லது.

# ஆண்கள் பெண்களுக்கு நிகர் இல்லை



அறிவில் சிறந்தவர்கள் ஆண்களா பெண்களா என்ற கேள்விக்கு விடயம் அறிந்தவர்கள் பெண்கள் என்றுதான் சொல்வார்கள்.

ஆண்குழந்தைகளைவிடப் பெண்குழந்தைகள் விரைவாகவே பேச ஆரம்பித்து விடுகின்றன. அதிக எண்ணிக்கையிலான வார்த்தைகளை வெளிப்படுத்துவ்து பல வகையான வாக்கிய அமைப்புகளை அமைத்துக்கொள்வது எல்லாம் பெண் குழந்தைகளுக்குச் சலபமாக வருகிறது. ஒரு கேள்வியைப் பலவிதமாகக்கேட்பது, தவறு இல்லாமல் பேசுவது, எழுதுவது, புரிந்துகொள்வது எனப் பல சோதனைகளில் பெண்குழந்தைகளே கெட்டிக்காரிகளாக விளங்கி இருக்கின்றன. இத்துடன் இரண்டு மொழிகளை மாற்றி மாற்றிப் பேசுவதில் மொழி பெயர்ப்பதிலும் பெண்களுக்கு வல்லமை அதிகம்.


சராசரி சூழலில் ஆண்களைவிடப் பெண்கள் புன்னகைப்பது அதிகம். அதிக தோழமை உணர்வோடு பேசுகிறவர்களும் பெண்கள்தான். பெண்கள் நெருக்கமாகப் பேசிக்கொண்டிருக்க இரண்டு அடிதள்ளி நின்ற நிலையில்தான் ஆண்கள் பேசிக்கொண்டிருப்பார்கள்.

பரிவோடும், சிரித்த முகத்தோடும் பேசும் பெண் மருத்துவர்களே அதிகம். பெண் பிள்ளைகள் புரிந்துகொள்ளும் அளவுக்கு ஆண்கள் சட்டெனப் புரிந்துகொள்ளமாட்டார்கள். வீடுகளில் இதுதான் நடக்கிறது.

அமெரிக்காவில் நடைபெற்ற ஒருசோதனையின்படி அதிக எண்ணிக்கையாக வாசனைகளை மோப்பம் பிடிக்கிறவர்கள் பெண்கள்தானாம். செவிப்புலன் உணர்வும் பெண்களுக்கே அதிகம். பல ஓசைகளுக்கு மத்தியில் தன் கணவர் மற்றும் பிள்ளைகளின் குரலை அடையாளம் கண்டுபிடித்து விடுகிறார்களாம் பெண்கள். ஒரு பொருளைப் பார்த்து அடையாளம் கண்டுபிடிப்பதிலும், அதை ஞாபகத்தில் வைத்துச் சொல்வதிலும் பெண்களே கெட்டிக்காரர்கள்.

புள்ளிவைத்துக் கோலம் போடுவது, கைக்கடிகாரங்களிலும், கணினிகளிலும் நுண்ணிய பாகங்களைப் பொருத்துவது என்பதுவரை பெண்களே திறமையாகச் செய்கிறார்களாம். நுட்பம், துல்லியம், வரைவு, மென்மையான பணிகள் என்பவற்றில் பெண்களை ஆண்களால் மிஞ்சமுடியாது. கவனத்தைக் குவித்துப் பொறுமையுடன் கையாள்வதில் பெண்களுக்கு ஆண்கள் இணையாக முடியாது.

# நினைவாற்றலை வளர்த்துக் கொள்ளுங்கள்



உங்களது நிறைவாற்றலைப் பற்றி உங்களது கணிப்பு என்ன? உண்மையில் உங்களிடமிருக்கும் நினைவாற்றல் சக்தியில் நீங்கள் மூன்று முதல் ஐந்து சதவீதத்தையே பயன்படுத்துகிறீர்கள். உங்கள் நினைவாற்றல் சக்தியை நீங்கள் பயன்படுத்தாவிட்டால், பயன்படுத்தாத இரும்புபோல அது துருப்பிடித்து போகும். அதுமட்டுமல்ல, நோய்கள் ஏற்படும் சூழ்நிலையும் 50 சதவீத அளவுக்கு அதிகரிக்கும். அதனால் உங்களுக்கு நினைவாற்றல் குறைவாக இருந்தாலும் அதை மேம்படுத்தும் முயற்சியில் ஈடுபடுங்கள்.

✳ தூங்குவதற்கு இரவில் படுக்கை அறைக்குப்போகும்போது, அன்று சந்தித்த எல்லா நபர்களின் பெயர்களையும் வரிசையாக நினைவுபடுத்திக் குறியுங்கள். ஆறு மாதங்கள் தொடந்து இவ்வாறு செய்துவந்தால் நினைவாற்றல் மேம்படும்.

✳ எனது நினைவாற்றல் நன்றாக வளர்ந்திருக்கின்றது என்று தினமும் நாலைந்து முறையாவது உங்களுக்குள்ளே சொல்லிக்கொள்ளுங்கள்.

✳ உற்சாகமான மனநிலையில் இருப்பவர்களுக்கு நினைவாற்றல் அதிகரிக்கும். ஏதோ உழைக்கிறோம். ஏதோ வாழ்கிறோம் என்று சோம்பேறித்தனமாகப் பேசிக்கொண்டிருந்தால், மூளையின் ஆற்றல் குறைந்துவிடும். ஆரோக்கியமாக வாழ்வேன், அதிக ஆயுளுடன் வாழ்வேன் என்ற சாதகமான எண்ணங்கள் மனதில் வளரவிடுங்கள்.

✳ மனதும், உடலும் அமைதியாகவும், ஆரோக்கியமாகவும் இருக்கும்போதுதான் நினைவாற்றல் நன்றாக வேலை செய்யும்.

✳ பதற்றம் நினைவாற்றலைக் கெடுக்கும். நல்ல இசையைக் கேட்டால் மனது சாந்தமாகும்.

✳ நண்பர்கள், நெருக்கமானவர்களின் தொலைபேசி எண்களை நினைவிலே வைத்திருங்கள். சிரமமாக இருந்தால் மூன்று நான்கு நாட்களில் அதனைத் தொடர்ந்து படித்து மனதில் பதியவையுங்கள்.

✳ ஏதாவது ஒன்றைப் படித்தால், படித்தோம், முடித்தோம் என்று விட்டுவிடாமல் படித்த [illegible] சிந்தியுங்கள். அதன் நிறைகுறைகளை அலசுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமகால அரசியல் ஆய்வு

அரசியல் ஆய்வாளர் மு.திருநாவுக்கரசு

# புதிய பரிமாணம் கண்டுள்ள சர்வதேச அரசியலும் புதிய கட்டத்தை எட்டியுள்ள இலங்கை அரசியலும்

**9.5.2004 அன்று நாவலர் கலாசார மண்டபத்தில் மு.திருநாவுக்கரசு - சமகால அரசியல் நிலை தொடர்பாக ஆற்றிய உரையிலிருந்து...**

*(நேற்றைய தொடர்ச்சி)*

அதாவது உலகமயமாக்கல் முதலாவது. எனவே, இந்த எண்ணத்தின் கீழிருந்துதான் இனப்பிரச்சினையை மேற்குலகம் அணுகுகின்றது. யார் விரும்பினாலென்ன, விரும்பாவிட்டாலென்ன உலகமயமாக்கல் போக்கில் நாம் யாரும் எந்த மாற்றம் செய்யமுடியாத அளவுக்கு அது ஒரு திசையில் போய்க்கொண்டே இருக்கின்றது.

இதுவரை காலமும் இந்தப் பூமியில் ஒரேயொரு உலகமயமாக்கல்தான் நிகழ்ந்தது. அது வலதுசாரி உலகமயமாக்கல்.

இடதுசாரி அரசுகள் இந்தப் பூமியில் இருந்தபோதிலும்கூட ஒருபோதும் இடதுசாரி உலகமயமாக்கல் இடம்பெறவில்லை. அப்படி நிகழ்ந்திருக்கின்றது என்று யாராவது சொன்னால் அது பச்சைப் பொய்.

இடதுசாரி நாடுகள் கூட, வலதுசாரி உலக பொருளாதார சந்தை அமைப்பின் கீழ்தான் இயங்குகின்றன. அது சோவியத் யூனியனாகவோ, சீனாவாகவோ அல்லது எந்த நாடாகவோகூட இருக்கலாம். உலக அரங்கில் அவர்கள் உலகப் பொருளாதாரத்தில், உலகச் சந்தை அமைப்பின் கீழ்தான் இயங்கினார்கள்.

எனவே உலக ஒழுங்கு என்பது எப்பொழுதுமே வலதுசாரி ஒழுங்குதான். இப்பொழுது முழுநீள அளவில் வலதுசாரி ஒழுங்கு உலகில் ஸ்தாபிக்கப்பட்டுவிட்டது. அவர்கள் தங்களுக்கேற்ற வகையிலேயே எல்லாத் தீர்வுகளையும் கொண்டுவருகின்றார்கள். அதிலொன்று இனப்பிரச்சினைக்கான தீர்வு.

ஆனால் பனிப்போர் மூண்ட காலத்தில் இனப்பிரச்சினைக்கான தீர்வில் மிலேச்சத்தனமாக வல்லரசின் நலன்கள் கவனிக்கப்பட்டன. இப்பொழுது சந்தையைப் பேணுவதற்கு இனங்களின் உரிமைகள் ஒரு எல்லைக்குட்பட அனுமதிக்கப்படவேண்டுமென்பது அவசியம் என்ற முடிவுக்கு வந்துள்ளன. இதன்கீழ் இனங்களின் உரிமைகளுக்கு ஒரு உத்தரவாதம் இருக்கின்றது.

இதன் அர்த்தம் உலகமயமாக்கலை நான் நியாயப்படுத்துகின்றேன் என்பதல்ல. நான் கதைப்பது முற்றிலுமே யதார்த்தத்தைப் பற்றியது. உண்மையைப் பற்றியது.

எனவே இந்தப் பின்னணியில்தான் பொஷ்னிய - கெசகோவியாவில் முன்வைக்கப்பட்டிருக்கின்ற தீர்வை அதாவது இன அமைப்பு சம்பந்தமான வகையில் மிகவும் அளவாகவும், இதுவரை வரலாறு கண்டிராத அளவிற்கு அந்த இன அமைப்புப் பற்றிய பிறேம் போடப்பட்டிருக்கின்றது. சமஷ்டி பற்றிய பிறேம் உணர்த்தப்பட்டிருக்கின்றது.

ஆனால், பொஷ்னிய - கெசகோவின தீர்வில் இனங்களுக்கிடையில் இருக்கக்கூடிய உரிமைகள் பற்றிய வரையில் மிக அழகாக வரையறுக்கப்பட்டிருக்கிறது. அதனை நாம் முற்றுமுழுவதுமாக அறிவார்ந்த மனப்பாங்குடனும், திறந்த மனத்துடனும் பார்க்கவேண்டும்.

பொஷ்னிய பெரும்பான்மையினர் - கெசகோவினர், குறோஸ்னியர். அங்கு ஜனாதிபதி பொஷ்னியராக இருந்தால் உப ஜனாதிபதி குறோஸ்னியராக இருப்பார். ஆனால், அடுத்த வருடம் உப ஜனாதிபதி - ஜனாதிபதியாக மாறிவிடுவார். நான்கு ஆண்டுகள்கொண்ட ஜனாதிபதி ஆட்சிக்காலத்தில், முதலாவது பொஷ்னிய ஜனாதிபதி, அவருக்குக்கீழ் குரோஸ்னிய ஜனாதிபதி. அடுத்த வருடம் குரோஸ்னிய உப ஜனாதிபதி - ஜனாதிபதியாக, பொஷ்னிய ஜனாதிபதி - உப ஜனாதிபதியாவார். எனவே நான்கு ஆண்டுகால ஆட்சியில் இரண்டு ஆண்டுகள் குரோஷ்னியர் ஜனாதிபதியாகவும், இரண்டு ஆண்டுகள் பொஷ்னியர் ஜனாதிபதியாகவும் இருப்பர்.

இங்கு மட்டுமல்ல பிரச்சினை. இதைவிடவும் மிகவும் அழகான அமைப்பொன்றை அங்கு உருவாக்கியிருக்கின்றார்கள். அவர்களுடைய மேற்சபைக்குள்ளால்தான் ஜனாதிபதியைத் தேர்வு செய்வதற்கான சபை உருவாக்கப்பட்டிருக்கிறது.

60 பிரதிநிதிகளைக் கொண்ட மேற்சபை மக்கள் சபை என அழைக்கப்படும். இந்த மக்கள் சபையில் 30 பிரதிநிதிகள் பொஷ்னியராக இருப்பார்கள். மிகுதி 30 பிரதிநிதிகளில் பெரும்பான்மையினர் குரோஷ்னியர்களாகவும், ஏனையோர் பிற இனங்களைச் சேர்ந்தவர்களாகவும் இருப்பர். எனவே அந்த மக்கள் சபையில் ஒருபோதும் அரைவாசிக்கு மேல் பொலஷ்னியர்கள் ஆதிக்கம் செலுத்த மாட்டார்கள்.

மக்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுத்தான் ஒரு சட்டம் கொண்டுவரப்படும். அங்கு இனங்களுக்கிடையே சமநிலை ஒன்று பேணப்பட்டிருக்கிறது. இரண்டாவது விடயம் ஜனாதிபதித் தேர்வில் பொஷ்னியர்கள் தங்களுக்குள் ஒரு குழுவை உருவாக்கி ஜனாதிபதி பிரதிநிதியைத் தெரிவுசெய்வார்கள்.

குரோஷியர்கள் தமக்குள் ஒரு குழுவை உருவாக்கி தங்களுக்கென்று உப ஜனாதிபதியின் பிரதிநிதியைத் தெரிவுசெய்வார்கள். இப்பொழுது ஒரு பொஷ்னிய ஜனாதிபதி பிரதிநிதி, ஒரு குரோஷிய ஜனாதிபதி என இருவர் இருப்பர்.

இவர்கள் இருவரும் நாடாளுமன்றின் இரு சபைகளாலும் அங்கீகரிக்கப்படவேண்டுமென்பது ஒன்று.

*(தொடரும்)*

---

# இந்த வார பலன்கள்

## 14.05.2004 - 20.05.2004 (திருக்கணிதம்)

| | | | |
|---|---|---|---|
| சந் | சூ புத ராகு | | செவ் சுக் சனி |
| யுரே | 14 பி.ப 3-25 இட-சூரி<br>16 பி.ப 2-01 மே-சந்<br>18 இரவு 1-32 இட-சந் | | |
| நெப் | | | குரு |
| | | கேது | |

### மேடம்

*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*



மேடராசியில் பிறந்தவர்களுக்கு தொழில் சீராக நடக்கும். குடும்பவாழ்க்கை சுபமாக அமையும். தேவைக்கேற்ப வருவாய் கிடைக்கும். இனபந்துக்களிடையே ஒற்றுமை இருக்கும். புத்திரர்களால் மகிழ்ச்சியடைவதுடன், பெருமையும் கிட்டும். குடும்பப் பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவார்கள். தேகசுகம் பாதிப்படையாது. தனித் தொழில்கள் வளர்ச்சியடையும். யாராவது கடன்வாங்கியிருந்தால் அது நிவர்த்தியாகும். புதிய ஒப்பந்தங்கள் செய்யப்படும். உத்தியோகத்தர்கள் சிறப்பாகப் பணியாற்றுவார்கள். சக தொழிலாளர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மேலோங்கும். பழைய இருப்புகள் விற்பனையாகிப் பணம் சேரும். புதிய முதலீடுகளுக்கு நன்று. மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கம் மிகுதியாக இருக்கும்.

### இடபம்

*(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்)*



இவர்களுக்குச் செய்தொழிலில் பிரயாசை அதிகமாகும். குடும்ப அங்கத்தவர்களிடையே ஒற்றுமை குறைவாக இருக்கும். புத்திரர்களால் பல சிக்கல்களும், அதனால் அதிக கவலையும் ஏற்படும். தேவையற்ற செலவுகள் அதிகமாக் காணப்படும். கிடைக்கும் வருமானம் தேவையைப் பூர்த்திசெய்யப் போதாது. இடையிடையே தேகசுகம் பாதிக்கப்படக்கூடும். குடும்பப் பெண்கள் நிதானத்துடன் சிக்கனமாக வாழ்க்கையை ஓட்டவேண்டும். மங்கல கருமங்கள் தாமதமடையும். உத்தியோகத்தர்களுக்கு அலைச்சலும் வீண் விரயங்களும் ஏற்படலாம். பிரயாணத்தில் விபதுக்கள பற்றி அவதானமாக இருக்கவும். வியாபாரம் மந்தநிலையையே காட்டும். மாணவர்களுக்குக் கல்வி முன்னேற்றம் குறைவாகவே இருக்கும். பரீட்சைகள் திருப்திதராது.

### மிதுனம்



*(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள்)*

மிதுனராசியில் பிறந்தவர்களுக்கு தொழிலில் ஊக்கம் குன்றும். குடும்பத்தில் சுகக்குறைவு அவ்வப்போது தோன்றிமறையும். பொருள் வரவு குறைவாக இருப்பினும், பிதாவழியால் உதவிகிட்டும். அடிக்கடி வைத்தியச்செலவு ஏற்படும். குடும்பப்பெண்களுக்கு ஆடம்பர ஆசைகள் அதிகமாவதால் பல சிக்கல்கள் தோன்றும். மங்கல கருமங்கள் தாமதத்தின்மேல் நிறைவுபெறும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகமாயினும் அதிகாரிகளின் ஆதரவு கிட்டும். வேலைப்பொறுப்புக்கள் அதிகமாகும். வர்த்தக நடவடிக்கைகள் சுமாராக இருக்கும். அதிகலாபம் கிடையாது. மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கம் தேவை. தேவையற்ற விடயங்களில் தலையிடுவதைத் தவிர்க்கவும்.

### கடகம்

*(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)*



கடகராசியில் பிறந்தவர்களுக்கு பல நற்பலன்கள் காத்திருக்கின்றன. செய்தொழில்கள் சிறப்பாக அமையும். குடும்பத்தில் குதூகலம் தென்படும். இனபந்துக்களாலும், புத்திரர்களாலும் உதவி உண்டு. கணவன், மனைவியிடையே அந்நியோன்யம் காணப்படும். சிலருக்கு உல்லாசப் பிரயாணங்கள் அமையலாம். பொருள்வரவு திருப்தியாக இருக்கும். குடும்பப்பெண்கள் மகிழச்சியுடனும், திருப்தியுடனும் காணப்படுவார்கள். திருமணம் சம்பந்தமான நிலைப்பாடுகள் திருப்தியளிக்கும். உத்தியோகத்துறையினர் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவார்கள். சிலருக்கு ஊதிய உயர்வு கிடைக்கலாம். வர்த்தக நடவடிக்கைகள் சீராக இருக்கும். வாடிக்கையாளர்களின் வரவு அதிகமாகும். வங்கி உதவிகளும் உரியநேரத்தில் கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் உயர்ச்சி அடைவர்.

### சிங்கம்

*(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)*



சிங்கராசியில் பிறந்த குடும்பத்தவர்களுக்கு செய்தொழில் நன்றாக நடக்கும். குடும்ப அங்கத்தவர்களிடையே ஒற்றுமை வலுப்பெறும். புத்திரர்களால் நற்பலன் உண்டு. வீட்டில் சுபநிகழ்வுகள் நடக்க இடமுண்டு. தேகசுகம் பாதிப்பில்லை. குடும்பப் பெண்கள் ஆடம்பரப் பொருட்களை வாங்கிச்சேர்ப்பதில் அக்கறையுள்ளவர்களாக இருப்பர். நண்பர்களால் உதவி உண்டு. திருமணம் சம்பந்தமான பேச்சுக்கள் தாமதத்தின் மேல் நிறைவுபெறும். உத்தியோகத்தர்களுக்கு உயரதிகாரிகளின் பாராட்டுக்கிட்டும். எதிர்பாராத வருமானம் கிடைக்கலாம். வர்த்தகர்களுக்கு வியாபாரத்தில் லாபம் கிட்டும். வியாபார முன்னேற்றம் உண்டு. மாணவர்களுக்கு முன்னேற்றமுண்டு. நேர்முகப் பரீட்சை நன்கு அமையும்.

### கன்னி

*(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)*



கன்னிராசியில் ஜனனமானவர்களுக்கு நன்மை தீமை கலந்த பலன் காட்டும். குடும்பத்தில் இடையிடையே சச்சரவுகள் காட்டும். வரவுக்கு மிஞ்சிய செலவுகளும் ஏற்பட இடமுண்டு. தேகாரோக்கியம் குறையும். பெண்கள் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ளவேண்டும். வைத்தியச் செலவுகள் கூடுதலாகவே காட்டும். விவாகப் பேச்சுக்கள் இழுபறிநிலையைக் காட்டும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகமாகும். எனினும், சக தொழிலாளர்களின் உதவி உண்டு. சிலருக்கு இடமாற்றங்கள் ஏற்படலாம். வர்த்தகர்களுக்கு வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்காது. வங்கி உதவிகளும் தேவையானபோது கிடைக்காது. மாணவர்களுக்கு முன்னேற்றம் குறைவாகவே இருக்கும். ஊக்கம் தேவை.

### துலாம்

*(சுவாதி , விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள் சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள்)*



துலாராசிக்காரருக்கு தொழில் முன்னேற்றம் சுமாராக இருக்கும். குடும்ப அங்கத்தவர்களிடையே கசப்புகள் தோன்றும். தேகாரோக்கியம் குறைவாக இருக்கும். புத்திரர்களால், இனபந்துக்களால் உதவி உண்டு. செலவுகளும் அதிகமாக இருக்கும். சிலருக்கு அடிக்கடி பிரயாணங்கள் ஏற்படலாம். குடும்பப் பெண்கள் அவதானமாக நடத்தல் நன்று. திருமணப் பேச்சுக்கள் நற்பலனைக் கொடுக்கும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு கூடுதலாக இருக்கும். எனினும், சக தொழிலாளர்களின் உதவி கிட்டும். அதிகாரிகள் அனுசரணையாக நடந்து கொள்வர். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தநிலையிலேயே இருக்கும். இரும்பு வியாபாரிகள் கூடிய நன்மை பெறுவர். மாணவர்களுக்கு கல்வியில் தடைகள், தாமதங்கள் காட்டும். தேகசுகம் பேணவும்.

### விருச்சிகம்

*(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)*



விருச்சிகக்காரர்களுக்கு தொழிற்துறை ஓரளவு நன்று. குடும்பத்தில் சந்தோஷமான நிகழ்ச்சிகள் இடம்பெறும். பெரியோர்களின் உதவி உண்டு. குடும்ப அங்கத்தவர்களிடையே ஒற்றுமை வலுக்கும். தேகசுகம் இடையிடையே பாதிக்கக்கூடும். மறைமுக ப்கைவர்களைப் பற்றி அவதானமாக இருக்கவும். குடும்பப் பெண்களின் எண்ணங்கள் நிறைவு பெறும். ஆடம்பரப் பொருட்களில் நாட்டம் கூடுதலாக இருக்கும். திருமணப் பேச்சுக்கள் சற்றுத் தாமதித்து நிறைவுபெற இடமுணடு. உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் உதவி உண்டு. வேலைப் பொறுப்புக்கள் கூடுதலாக இருக்கும். தொழில் காரணமாக வெளிநாடு செல்லும் வாய்ப்பு உண்டு. வியாபாரிகளுக்கு லாபம் கிட்டும். மாணவர்கள் முன்னேற்றம் அடைவர். ஆசிரியர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

### தனுசு

*(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)*



தனுசு இராசியினருக்கு பல நன்மையான பலன்கள் கிட்டும். தொழில் சிறப்பாக நடக்கும். குடும்ப அங்கத்தவர்களிடையே ஒற்றுமை, புரிந்துணர்வு ஏற்படும். இல்லத்தில் சுபகருமங்கள் நடக்கும். தேகநிலை ஆரோக்கியத்துடன் காணப்படும். பணவருவாய் தேவைக்குப் போதுமானதாக இருக்கும். குடும்பப்பெண்கள் அமைதியுடனும், சுறுசுறுப்புடனும் காணப்படுவர். உத்தியோகத்துறையினர் சிறப்பாகச் செயற்படுவர். அதிகாரிகள் ஒத்துழைப்பு வழங்குவர். சிலர் ஊதிய உயர்வு பெறுவர். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். வங்கி உதவிகள் கிடைக்கும். ஆடம்பரப் பொருட்கள் விற்பனை செய்வோர் கூடிய லாபம் பெறுவர். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் மிகும். பரீட்சையில் சித்தி, உயர்கல்வி கிடைக்கும்.

### கும்பம்

*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள)*



கும்பராசியில் பிறந்தவர்களுக்கு முன்னேற்றமான பலன்கள் நடக்கும் குடும்பத்திலிருந்த கஷ்டங்கள் விரைவில் விலகும். பெரியவர்களுடைய ஆசியும், ஆதரவும் பெருகும். குடும்பப் பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர். தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்கள் முன்னேற்றம் அடைவார்கள். தனித்தொழில் புரிபவர்களுக்கும் சிறப்பான பலன்கள் உண்டு. உத்தியோகத்தர்கள் சிறப்பாகப் பணியாற்றுவர், அதிகாரிகளின் பாராட்டுதலையும் பெறுவர். மங்கல கருமங்கள் கைகூடும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் ஓகோ என்று நடக்கும். புதிய வாடிக்கையாளர்கள் சேருவார்கள். மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கமும், முன்னேற்றமும் உண்டு.

### மகரம்

*(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)*



மகர ராசிக்காரர்களுக்கு அட்டமத்து வியாழன் அமைதியைக் குலைக்கும். தொழிலில் பிரயாசை அதிகமாகும். முயற்சிக்கேற்ப லாபம் கிடைக்காமல்போகும். புத்திரர்களால் கவலை அதிகமாகும். தேகசுகமும் பாதிக்கப்படும். வீடு, வாகனம் என்பன செலவுகளைக் கொடுக்கும். மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். குடும்பப் பெண்கள் எதிலும் எச்சரிக்கையுடனும், நிதானத்துடனும் நடந்து கொள்ளவேண்டும். தேவையில்லாத பேச்சுக்களால் வாக்குவாதங்கள் ஏற்படலாம். திருமணப் பேச்சுக்கள் கைகூடாது. உத்தியோகத்தினருக்கு வேலைப்பளு அதிகம் காணப்படும். சிலருக்கு வசதி குறைந்த இடமாற்றங்கள் ஏற்படலாம். வீண்விரயம் அதிகரிக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தமாக இருக்கும். பணவருவாய் குறையும். மாணவர்களுக்கு சுகக குறைவு, மறதி முதலியவற்றால் கல்வி முன்னேற்றம் குறையும்.

### மீனம்

*(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)*



மீனராசியில் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் நிம்மதிக் குறைவையே காட்டுகிறது. குடும்பத்தில் சச்சரவுகள் தோன்றும். விரோத சக்திகளும் செயற்படும். உறவினர்களால் தொல்லைகள் வரும். வரவிலும் பார்க்க செலவுகள் அதிகரித்துக்கொண்டேபோகும். வருமானங்கள் குறைந்துகொண்டு செல்லும். குடும்பப் பெண்கள் அவதானமாகவும், நாவடக்கத்துடனும் சமாளிக்கவேண்டும். தொடங்கும் கருமங்கள் பல இழுபறிகளைக் கொடுக்கும். விவாகப் பேச்சுக்கள் தாமதத்தையே காட்டும். உத்தியோகத்தர்கள் தமது பொறுப்புக்களைச் செய்வனே செய்வதில் கஷ்டமுறுவர். சகதொழிலாளர்களின் உதவி கிடையாது. அதிகாரிகள் சீற்றத்துக்கு ஆளாகாமல் பணியாற்றவேண்டும். வர்த்தகர்களுக்கு முதலீடுகள் தேங்கிக் கிடக்கும். விற்பனை குறைவாகவே இருக்கும். மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றங்களில் தடைகள் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

*பொறை ஒருங்கு மேல்வருங்கால் தாங்கி இறைவற்கு*
*இறைஒருங்கு நேர்வது நாடு*

திருக்குறள்

# நமது நோக்கு

## இந்திய தேர்தல் முடிவுகள்; சில எண்ணப் பகிர்வுகள்

இந்தியாவின் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களையும், புதிய அரசையும் தேர்ந்தெடுப்பதற்காக கடந்த சில வாரங்களாக கட்டம் கட்டமாக நடைபெற்ற தேர்தல் முடிவுகள் வெளியாகத் தொடங்கியுள்ள நிலையில் நேற்று மாலைவரை கிடைத்த செய்திகளின் அடிப்படையில் பார்த்தால், இந்தியாவில் ஆட்சி மாற்றம் ஒன்று நிச்சயமாகி விட்டதென்றே கூறக்கூடியதாக உள்ளது.

பிரதமர் வாஜ்பாய் தமது பதவியை இராஜினாமாச் செய்யத் தயாராகிவிட்டதாகவும் கூறப்படுகிறது. இந்திய அரசியலில் நேரு, இந்திராகாந்தி, ராஜீவ்காந்தி, நரசிம்மராவ் எனத் தொடர்ந்த காங்கிரஸ் பாரம்பரியம் மீண்டும் தலைதூக்கும் அறிகுறிகள் ஓரளவுக்கு தெளிவாகத் தொடங்கியுள்ளது. காங்கிரஸின் நெடுங்கால அரசியல் ஆதிக்கத்தை அவ்வப்போது ஜனதாதளம், தேசியமுன்னணி போன்று ஒற்றுமையும், உறுதியும் அற்ற கூட்டுக்கட்சிகள் ஆட்சியைக் கைப்பற்றியபோதும் தொடர்ந்து அதனைத் தக்கவைக்கும் திறனின்றி சிதைந்து போன வரலாற்றை அடுத்து காங்கிரஸுக்கு மாற்றாக ஒரு மாறுபட்ட கொள்கைகளைக் கொண்ட இந்துத்துவ சிந்தனையாளர்களின் மதவாதக் கோட்பாடுகளைக் கொண்ட பாரதிய ஜனதாக்கட்சி ஆட்சியைக் கைப்பற்றியது.

- அதுவும் ராம ராஜ்ஜியத்தை ஏற்படுத்துவோம்

ரோம ராஜ்ஜியம் (சோனியாதலைமையிலான அரசு) உருவாவத்தைத் தடுப்போம் என்ற கோஷத்தை முன் வைத்தே அரச பீடம் ஏறினர்.

- 'ராஷ்ட்ரிய ஸ்வயம் சேவக' என்ற பெயரைக் கொண்ட ஆர்.எஸ்.எஸ் என்ற இந்து அடிப்படைவாத மதவெறி அமைப்பின் அரசியல் பிரிவான பாரதிய ஜனதாக் கட்சி ஆட்சிபீடம் ஏறியது முதல் இந்தியாவில் மதக்கலவரங்கள் - குறிப்பாக இந்து முஸ்லிம் இனங்களுக்கிடையேயான கலவரங்கள் இந்தியாவெங்கும் பரவலாக நடந்தேறியது.

மதச் சார்பின்மை குறித்து பெருமெடுப்பில் இந்திய அரசுத்தலைவர்கள் பேசினாலும் கூட இந்துத்துவ சிந்தனை கொண்ட வெறிமிக்க அடிப்படை வாதிகளால் தமது இஸ்லாமிய, கிறிஸ்தவ எதிர்ப்புவாதத்தைக் கைவிடும் மனப்பக்குவம் இல்லாதவர்களாகவே அவர்கள் இருந்தனர்.

- பாரதிய ஜனதா மதச்சார்பின்மையைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம் என்பதை வாஜ்பாய் பெருமளவுக்கு புரிந்து கொண்ட போதிலும், அத்வானி போன்ற மிகத் தீவிரமான இந்துத்துவ அடிப்படைவாதிகளும் பாரதிய ஜனதா அரசை ஆட்டிப்படைத்த பின்னணி சக்திகளான ஆர்.எஸ்.எஸ், விஷ்வஹிந்து பரிஷத் ஹிந்து முன்னணி போன்ற மதவாதச் சக்திகளும் அதற்கு ஒத்துழைக்க தயாராக ஒருபோதுமே இருந்ததில்லை. இந்தநிலையில் இத்தனை காலமும் பாரதீய ஜனதா அரசை எத்தனையோ எதிர்புக்களுக்கிடையேயும் ஒரு மாதிரி இழுத்துச் சென்றவா வாஜ்பாய்தான் என்பதில் ஐயமில்லை.

குஜராத் இனவன்முறைக் கொடுமைகள் பரவலாக இந்தியா பூராவும் நிகழ்ந்த முஸ்லிம் மக்களுக்கு எதிரான கலவரங்கள், ஒடுக்குமுறைகள் கிறிஸ்தவ மதகுருமார் மற்றும் மதம்மாறிய மக்களுக்கு எதிரான வன்முறைகள், கொலைகள், இராமர் கோவில் கட்டவேண்டும் என்பதில் விடாப்பிடியாகக் கொண்டிருந்த அர்த்தமற்ற இந்துத்துவ வெறி, மதமாற்றத் தடைச் சட்டத்தை அமுல்படுத்த முனைந்தமை போன்ற அனைத்துமே பாரதய ஜனதாவின் ஜனநாயகத்தன்மையை முற்றிலும் கேள்விக்குறியாக்கின.

வெறுமனே இந்தியா ஒளிர்கிறது என்று பிரசாரம் செய்து கொண்டும் இந்தியா அறிவியலில், பொருளாதாரத்தில் வளர்ந்து வருகின்றது என்று கூறிக்கொண்டு பாரதீய ஜனதாக் கட்சியினர் இம்முறை தேர்தலில் மக்கள் முன்வந்து நின்றபோது மக்களால் அதை ஜீரணிக்க முடியவில்லை. இதனையே தற்போதைய தேர்தல் முடிவுகள் உறுதிசெய்வதாக உள்ளது.

பாரதீய ஜனதாவின் தோல்வி இந்து அடிப்படை வாதத்தை இந்தியமக்கள்- குறிப்பாக தென்மாநில மக்கள்- நிராகரித்துள்ளமையையே எடுத்துக் காட்டுவதாக உள்ளது.

இந்தத் தேர்தலில் காங்கிரஸ் கூட்டணிக்கு கிடைத்துள்ள வெற்றியானது, பாரதிய ஜனதா ஆட்சி மீதான மக்களின் அதிருப்தியின் வெளிப்பாடே தவிர அதற்கு மக்கள் அளித்துள்ள ஆதரவின் வெளிப்பாடல்ல என்ற உண்மையையும் கூறியேயாகவேண்டும்.

சலிப்புற்ற - வெறுப்புற்ற நிலையில் உள்ள இந்தியர்கள் ஏதாவது ஒரு மாற்றத்தை விரும்பியுள்ளனர். அவ்வளவுதான்!


இதேவேளை தமிழகத்திலும் ஜெயலலிதாவின் அட்டகாச ஆர்ப்பாட்ட அரசியலுக்கு தமிழகமக்கள் ஒரு ஆப்புவைக்கத் துணிந்திருக்கிறார்கள் என்பது நடந்து முடிந்துள்ள தேர்தலில் உணர்த்துவதாக உள்ளது.

தி.மு.க காங்கிரஸ் கூட்டணிக்கு கிடைத்துள்ள உறுதியற்ற அவர்களின் கொள்கைக்கு கிடைத்த வெற்றியல்ல... மாறாக ஜெயலலிதாவின் அதிகார அத்துமீறல் போக்குக்கும் அவரது திமிர்தனமான அரசியல் செயற்பாடுகளுக்கும் மக்கள் அளித்த பரிசாகும்.

எம்.ஜி.ஆரின் அரசியல் வாரிசு என்று கூறிக்கொண்டு பெரியாரின் கொள்கைகளை அவமதிக்கும் வகையில் தன்னை ஒரு இந்துத்துவ ஆதரவுச் சக்தியாக இனங் காட்டி, பாரதிய ஜனதாவுடன் இறுதி நேரத்தில் ஒட்டிக் கொண்ட ஜெயலலிதாவின் நடிப்பு இந்தத் தேர்தலில் எடுபடாது போய்விட்டது.

எப்படியாயினும் இந்தியாவில் மதவெறி அரசியல் பின்னடைவுகாணத் தொடங்கியுள்ளதையே இந்தத் தேர்தல் முடிவுகள் உறுதிசெய்துள்ள அதேவேளை, மீண்டும் முன்னர் தாங்கள் வெறுத்து நிராகரித்த சத்திகளையே வேறுவழியின்றி ஆட்சிபீடம் ஏற்றியிருக்கிறார்கள் என்பதும் நெடுமூச்செறியவைக்கும் செய்தியே யாகும்.

## நாடும் நடப்பும்




### தனியாரிடம் பாதுகாப்புபணி ஒப்படைப்பதை எதிர்த்து

# யாழ்.பல்கலை ஊழியர்கள் இன்று மறியல் போராட்டம்!

(யாழ்ப்பாணம்)

நாளை சனிக்கிழமை முதல் யாழ்.பல்கலைக்கழகத்தின் இராமநாதன் நுண்கலைத்துறை, கைதடி சித்த மருத்துவம், வெளிவாரிக் கற்கைநெறி அலகு ஆகிய பகுதிகளின் பாதுகாப்புப் பணியைத் தனியாரிடம் ஒப்படைப்பதென பல்கலைக் கழக நிர்வாகம் தீர்மானித்துள்ளதைக் கண்டித்து யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் இன்று அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளனர்.

இந்த வேலை நிறுத்தத்தில் நீர் விநியோகப்பகுதி, ஊழியர்கள் தவிர்ந்த ஏனைய ஊழியர்கள் அனைவரும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவர். பாதுகாப்பு ஊழியர்கள் - ஊழியர் சங்கப் பதிவேட்டில் கையொப்பமிட்டுத் தொண்டர் அடிப்படையில் சீருடை அணியாது பணிபுரிவர்.

அன்றையதினம் பரீட்சைக் கடமைகளில் ஈடுபட வேண்டியுள்ள அங்கத்தவர்கள் ஊழியர் சங்கத்தலைவரிடம் முன் அனுமதி பெற்றுக் கடமையில் ஈடுபடுவர் என, பல்கலைக் கழக ஊழியர் சங்கத்தினர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இந்திய மீனவர்களுக்கு எதிரான வழக்கு 17 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது!

கடந்த வருட இறுதிப் பகுதியில் நயினாதீவு கடற்பரப்பில் அத்துமீறி மீன் பிடித்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட இந்திய மீனவர்களுக்கு எதிராக சட்டமா அதிபரால் யாழ். நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எதிர்வரும் 17 ஆம் திகதி திங கட்கிழமை ஒத்திவைக்கப்பட்டுள்ளது,

இந்த வழக்கு நேற்று முன்தினம் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி. எஸ்.வரதராஜா முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது, குறித்த வழக்குகள் சம்பந்தமாக தான் சட்டமா அதிபரின் அறிவுறுத்தல்களைப் பெறவேண்டியிருப்பதாக அரச சட்டத்தரணி தெரிவித்ததை அடுத்து நீதிபதி வழக்கை எதிர் வரும் திங்கட்கிழமைக்கு ஒத்தி வைத்தார். மீனவர்கள் தரப்பில் அரச சட்டத்தரணி மு.திருநாவுக்கரசு நீதிமன்றில் ஆஜரானார்.

இந்தியா இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த எட்டு மீனவர்களும் யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

## கடந்த நான்கு மாதங்களில் மட்டும் 4496 மிதிவெடிகள் அகற்றப்பட்டன!

கடந்த நான்கு மாதங்களில் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவு 298193 சதுரகிலோ மீற்றர் நிலப்பரப்பில் 4496 மிதிவெடிகளை அகற்றியுள்ளது.

இந்தக் கண்ணிவெடிகள், வாழ்விடங்கள், வயல்வெளிகள் பாதைகளுக்கு அருகில் படையினரால் புதைக்கப்பட்ட மிதி வெடிகளே அகற்றப்பட்டுள்ளன.

இந்தவகையில், 2002 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதத்திலிருந்து டிசம்பர்வரை 4321 மிதிவெடிகளும், 2003 ஆம் ஆண்டு ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை 6799 மிதிவெடிகளும், 2004 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் ஏப்ரல்வரை 4496 மிதிவெடிகளுமே அகற்றப்பட்டுள்ளன. (17)

# கடந்த அரசு காலத்தில் நியமனம் பெற்ற அமைச்சு ஆலோசகர்களை நீக்கத்திட்டம்!

(கொழும்பு)

2002 ஆம் ஆண்டுக்குப் பின்பு அமைச்சுக்களின் ஆலோசகர் பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட சகல அதிகாரிகளையும் சேவைகளில் இருந்து நீக்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சகல அமைச்சுக்களிலும் பல ஆலோசகர்களை நியமித்து இருப்பதோடு, கல்வி அமைச்சில் மாத்திரம் பத்து ஆலோசகர்களுக்கு மேல் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

மேலும், ஆலோசகர்களை நீக்குவதற்காக அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட தீர்மானம் குறித்து நேற்று முன்தினம் கல்வியமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சுக்களில் கடமையாற்றிய உயரதிகாரிகள் ஓய்வூதியம் பெற்ற பின்னர் அந்த அமைச்சுக்களிலேயே கடமையாற்றி வருகின்றனர்.

அதிகமானோர் தமது அரசியல் செல்வாக்கால் இவ்வாறு ஆலோசகர்களாக நியமிக்கப்பட்டாலும், அவர்களுக்கு சேவையில் அதிகமான பொறுப்பு வழங்கவில்லை என கல்வியமைச்சின் அதிகாரி ஒருவர் மேலும் தெரிவித்திருக்கிறார். (ப)

# யாழ்ப்பாணம் பொம்மைவெளிப் பகுதியில் புற்றுநோய் வைத்தியசாலை அமையும்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொம்மைவெளிப் பகுதியில் புற்றுநோய் வைத்தியசாலை அமைக்கும் திட்டமொன்றை வடக்கு கிழக்கு புற்றுநோயாளர் மையம் மேற்கொண்டு வருகிறது.

லண்டனைத் தலைமையகமாகவும், நிதி உதவி மையமாகவும் கொண்டு செயற்பட்டுவரும் இந்த நிறுவனத்தின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ரி.கணேசராஜா இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது -

இலங்கையின் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் உள்ள புற்றுநோயாளர்களுக்கு உதவும்வகையில் இந்தப் புற்றுநோய் சிகிச்சை நிலையம் இலவச சேவையை வழங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

இந்த நிறுவனத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பிலும் ஓர் புற்றுநோய் வைத்தியசாலை செயற்பட்டு வருகிறது. அதே போல் ஓர் புற்றுநோய் வைத்தியசாலையை அமைக்கும் நடவடிக்கையை எடுத்துள்ள அந்த நிறுவனத்திற்கு பொம்மை வெளிப்பகுதியில் 25 பரப்புக்காணியை இரண்டு சமூக நலன் விரும்பிகள் இணைந்து வழங்க முன்வந்துள்ளன.

எனினும், அந்தப் பகுதியல் 'ஹலோ றஸ்ட்' வெடிபொருள் அகற்றும் பிரிவினர் வெடிபொருள்களை வெடிக்க வைக்கும் பணியில் ஈடுபட்டு வருவதுடன், அந்தக் காணியிலுள்ள இடத்தில் மிதிவெடி அபாயப்பலகையும் நட்டு வைத்துள்ளனர்.

இது தொடர்பாக, புற்றுநோய் வைத்தியசாலை அமைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோர் யாழ்.மாவட்டச் செயலகத்திலும், யாழ்.உதவி அரச அதிபர் செயலகத்திலும் முறையிட்டுள்ளதுடன், தமது நற்கருமத்திற்கு அந்த இடத்தை விட்டுத்தருமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி பொதுத் தராதரப் பத்திர (உ/த) 2004

## வணிகக்கல்வி

B.S.பசில் (B.B.A)

## மாதிரி வினாத்தாள்

நேற்றைய தொடர்ச்சி...

பணவடிவிலல்லா முதலீடுகள்.

| | | |
|---|---|---|
| 1. நிலம் | X | |
| 2. கட்டடம் | X | |
| 3. இயந்திரம் | X | |
| 4. ஏனைய சொத்துக்கள். | X | X |
| | | X |

விற்பனை வருமான மதிப்பீடு

| பொருட்கள் சேவைகள் | மாதாந்தம் அளவு | விலை | விற்பனை வருமானம் | வருடாந்த விற்பனை வருமானம் |
|---|---|---|---|---|
| 1 | X | X | X | X |
| 2 | X | X | X | X |
| 3 | X | X | X | X |
| 4 | X | X | X | X |
| 5 | X | X | X | X |
| | X | X | X | X |
| கழி.பெறுமானம் கூட்டப்பட்ட வரி | X | X | X | X |
| தேறிய விற்பனை வருமானம் | X | X | X | X |

செயற்றிட்டக் கிரயக் கணக்கீடு.

ஆண்டிற்கான விற்பனை வருமானம் = ஆண்டிற்கான விற்பனை அலகு X விலை-நேர்க்கிரயம் (அது தேறக்கூடிய நிகரப் பெறுமதி அடிப்படையில்)

தேறிய விற்பனை வருமானம் = அலகிற்கான விற்பனை வருமானம் - பெறுமானம் கூட்டப்பட்ட வரி

பங்களிப்பு = அலகிற்கான விற்பனை விலை - அலகிற்கான மாறும் கிரயம்

தேறிய இலாபம் = மொத்த பங்களிப்பு - மொத்த நிலையான செலவு

செயல்திட்டம் தொடர்பான பொருளாதார தரவு தொடர்பான விகிதங்கள்

**1. விற்பனையில் தேறிய இலாப வீதம்**


நிறுவனத்தின் தேறிய எதிர்பார்க்கும் தேறிய இலாபத்தை எதிர்பார்க்கும் விற்பனைவருமானத்துடன் நூற்றுவீதமாக இது கணிப்பிடப்படும்.

$$\text{விற்பனையில் தேறிய இலாப வீதம்} = \frac{\text{தேறிய இலாபம்}}{\text{விற்பனை}} \times 100\%$$

2. ஈடுபடுத்திய மொத்த முதல் மீதான உழைப்பு வீதம் அல்லது மொத்த செயற்றிட்ட கிரயத்திற்கான உழைப்பு விகிதம்.

$$\text{செயற்திட்ட கிரயத்தின் மீதான தேறிய இலாப வீதம்} = \frac{\text{தேறிய இலாபம்}}{\text{மொத்த செயல்திட்ட கிரயம்}} \times 100\%$$

3. இலாப நட்டமற்ற புள்ளி அல்லது சமப்பாட்டுப் புள்ளி அல்லது இலாப இயலுமைத் தன்மை. நிறுவனம் உத்தேச செயற்றிட்டம் மூலம் எவ்வளவு பொருட்களை உற்பத்தி செய்து வழங்குதல் அந்த நிறுவனத்திற்கு இலாபத்தையோ அல்லது நட்டத்தையோ வழங்கமாட்டாது என்பதைக் காட்டும் தொகை இலாப நட்டமற்ற விற்பனைத் தொகையாகும். அதைக்காட்டும் புள்ளி இலாப நட்டமற்ற புள்ளியாகும். இந்த புள்ளிக்கு உட்பட்ட தொகையை உற்பத்திசெய்து விற்றால் நிறுவனம் நட்டத்தை அனுபவிக்கும். மாறாக இந்த புள்ளிக்கு மேற்பட்டதொகையை உற்பத்தி செய்து விற்றால் நிறுவனம் இலாபத்தை அடைய முடியும். இதனை கீழ்வருமாறு விளக்கப்படத்தில் காட்டலாம்.




$$\text{இலாப நட்டமற்ற புள்ளியல் விற்பனைதத் தொகை} = \frac{\text{மொத்த நிலையான செலவு}}{\text{அலகிற்கான பங்களிப்பு}}$$

$$\text{இலாப நட்டமற்ற புள்ளியல் விற்பனைப் பெறுமதி} = \frac{\text{மொத்த நிலையான செலவு}}{\text{அலகிற்கான பங்களிப்பு}} \times \text{விற்பனை விலை}$$

$$\text{இலக்குத்தேறிய இலாபத்தில் விற்பனை அலகுகள்} = \frac{\text{மொத்த நிலையான செலவு} + \text{இலக்குத்தேறிய இலாபம்}}{\text{அலகிற்கான பங்களிப்பு}}$$

**4. ஊழியச் செறிவுத்தன்மை**

உத்தேச செயற்றிட்டம் மூலம் தொழில் வாய்ப்பை ஏற்படுத்துவதற்கு எவ்வளவு மூலதனம் நிறுவனத்தில் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்பதை கணிக்க உதவுவது ஊழியச் செறிவுத் தன்மையாகும்.

$$\text{ஊழியச் செறிவுத்தன்மை} = \frac{\text{மொத்த செயற்திட்ட கிரயம்}}{\text{ஊழியர்களின் எண்ணிக்கை}}$$

**5. உள்நாட்டு மூலப்பொருள் பொருள் பயன்பாடு**

உத்தேச செயற்றிட்டத்திற்கு பயன்படத்தப்படக்கூடிய மூலப்பொருட்களுள் எந்தளவு தொகை உள்நாட்டு மூலப்பொருட்களாக ஈடுபடுத்தப்படுகின்றன என்பதை எடுத்துக் காட்டுவது உள்நாட்டு மூலப்பொருள்

$$\text{உள்நாட்டு மூலப்பொருள் பயன்பாடு} = \frac{\text{உள்நாட்டு மூலப்பொருட் கிரயம்}}{\text{மொத்த மூலப்பொருட் கிரயம்}} \times 100\%$$


பயன்பாடாகும்.

**6. ஏற்றுமதி நெகிழ்வுத் தன்மை**

உத்தேச செயல்திட்டம் மூலம் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களில் எந்தளவு தொகை ஏற்றுமதி செய்யப்படும் என்பதை அறிய உதவுவது ஏற்றுமதி நெகிழ்வுத் தன்மையாகும்.


$$\text{ஏற்றுமதி நெகிழ்வுத் தன்மை} = \frac{\text{மொத்த ஏற்றுமதிப் பெறுமதி}}{\text{மொத்த விற்பனைப் பெறுமதி}} \times 100\%$$

### பயிற்சி வினாக்கள்.




1. X இனால் காட்டப்படுவது யாது?
2. P இனால் காட்டப்படுவது யாது?
3. Q இனால் காட்டப்படுவது யாது?
4. A இனால் காட்டப்படுவது யாது?
5. B இனால் காட்டப்படுவது யாது?
6. C இனால் காட்டப்படுவது யாது?

2. X நிறுவனம் மென்பானங்களை உற்பத்தி செய்கின்றன. இதன் ஆண்டு இயலளவினை 120000 லீற்றர்களாகும். இதன் மொத்த நிலையான செலவு ரூபா 300000. அலகிற்கான விற்பனை விலை ரூபா 10 அலகிற்கான மாறும் செலவு.
ரூபா 4
   1. பங்களிப்பு யாது?
   2. இலாப நட்டமற்ற புள்ளியில் விற்பனை அளவு யாது?
   3. இலாப நட்டமற்ற புள்ளியில் விற்பனைப் பெறுமதி யாது.
   4. மேற்கூறப்பட்டவற்றை படத்தில் வரைந்து காட்டுக.
   5. ரூபா 24000 தை இலக்குத் தேறிய இலாபமாகப் பெறவேண்டுமாயின் எவ்வளவு லீற்றர்களை விற்கவேண்டும்.
   6. 72000 லீற்றர்கள் உற்பத்தி செய்து விற்றால் ஏற்படக்கூடிய இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு




3. 1. X இனால் காட்டப்படுவது யாது?
   2. P இனால் காட்டப்படுவது யாது?
   3. Q இனால் காட்டப்படுவது யாது?
   4. A இனால் காட்டப்படுவது யாது?
   5. B இனால் காட்டப்படுவது யாது?
   6. C இனால் காட்டப்படுவது யாது?
   7. $C_1$ இனால் காட்டப்படுவது யாது?
   8. $C_2$ இனால் காட்டப்படுவது யாது?

4. நிறுவனமொன்றின் செயற்திட்டம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | |
|---|---|
| காணிகட்டடம் | 250 000 ரூபா |
| இயந்திரம் | 200 000 ரூபா |
| தளபாடம் | 100 000 ரூபா |
| இயந்திரத்தைப் பெறுவதற்கான செலவு | 30 000 ரூபா |
| மின்சக்தியைப் பெருத்துவதற்கான செலவு | 20 000 ரூபா |
| பூர்வாங்கச் செலவுகள் | 40 000 ரூபா |
| நிச்சயமற்ற செலவுகள் | 10 000 ரூபா |
| தொழிற்படு மூலத்தனத் தேவை | 350 000 ரூபா |
| எதிர்பார்க்கும் விற்பனை உள்நாட்டில் | 2 000 000 ரூபா |
| எதிர்பார்க்கும் தேறிய இலாபம் | 800 000 ரூபா |
| ஈடுபடத்தப்படும் தொழிலாளர்கள் | 100 பேர் |

   1. மொத்த செயற்திட்டக் கிரயம் யாது?
   2. வீற்பனைகள் மீதான தேறிய இலாப வீதம் யாது?
   3. செயற்திட்ட கிரயம் மீதான வருவாய் வீதம் யாது?
   4. ஊழியச் செலவுத்தன்மை யாது?
   5. ஏற்றுமதி நெகிழ்வுத்தன்மை என்ன வீதம்.

5. பின்வரும் மதிப்பீடுகள் ஒரு வியாபாரத்திற்காக தயாரிக்கப்பட்டதெனக் கொள்க.

| | |
|---|---|
| மொத்த நிலையான செலவுகள் | 50 000 ரூபா |
| தேறிய விற்பனை வருமானம் | 215 000 ரூபா |
| ஒரு பொருளின் விற்பனை விலை | 25 ரூபா |
| தேறிய இலாபம் | 150 000 ரூபா |
| மாறும் செலவு | 15 000 ரூபா |
| உற்பத்தி | 10 000 அலகுகள் |
| சாதாரண பங்கு முதல் | 600 000 ரூபா |
| தொழிற்படு மூலதனம் | 30 000 ரூபா |
| நீண்டகாலக் கடன் | 200 000 ரூபா |
| கட்டடங்கள் | 40 000 ரூபா |
| மோட்டார் வாகனம் | 60 000 ரூபா |

   1. சமப்பாட்டுப் புள்ளி (Break even Point) யாது?
   2. உரிமையாளர் முதல் மீதான வருவாயை (Return on Owners') கணிக்குக.

6. ஒரு சப்பாத்து உற்பத்தியாளனின் மொத்த நிலையான கிரயம் ரூபா 2 மில்லியன். ஒரு சோடிக்கான மாறும் செலவு ரூபா 200. ஒரு சோடியின் விற்பனை விலை ரூபா 300.
   அ. இலாப நட்டமற்ற புள்ளியில் உற்பத்திசெய்ய எத்தனை அலகுகளை உற்பத்திசெய்ய வேண்டும்.
   ஆ. இலாப நட்டமற்ற பகுப்பாய்வின் நன்மைகளைக் கூறுக.
      1. இலாபமீட்டக்கூடிய ஆரம்ப கட்டத்தை அறியலாம்.
      2. ஒவ்வொரு உற்பத்தி மட்டத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய இலாப நட்ட நிலையை அறியலாம்.
      3. எதிர்கால உற்பத்தியளவைத் தீர்மானிக்க உதவுதல்.
      4. விற்பனையை விலையைத் தீர்மானிக்க உதவுதல்.

7. ஒரு செயற்திட்ட அறிக்கையின் நிதிப் பகுப்பாய்வின் மூலம் எந்த முக்கிய தகவல்கள் வெளிக்கொணரப்படுகின்றன.
   1. செயற்திட்டத்தின் வருமானம்
   2. செயற்திட்டத்தின் செலவு
   3. செயற்திட்டத்தின் பங்களிப்பு
   4. செயற்திட்டத்தின் இலாபம்
   5. நிதி பெறும் வழிகளும் பயன்படுத்தும் வழிகளும்
   6. சமப்பாட்டுப்புள்ளி

8. செயற்திட்டம் ஒன்றின் இயல்தகவு ஆய்வு என்பதன் கருத்து யாது?
செயற்திட்டத்தின் நிதி பொருளாதார, தொழிநுட்ப, சமூகப் பொருத்தப்பாடு பற்றிய பகுப்பாய்வு.

9. செயற்திட்டம் ஒன்று தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.
ஆண்டிற்குரிய நிலையான கிரயம் ரூபா 800 000
அலகொன்றுக்கான போக்குவரத்துக் கிரயம் ரூபா 600
அலகொன்றிற்கான உழைப்புக் கிரயம் பொருட்கிரயமும் ரூபா 2 000
அலகொன்றின் விற்பனை விலை ரூபா 3 000
இச்செயற்திட்டத்தின் சமப்பாட்டு அலகுகளின் தொகை யாது?
2 000 அலகுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலம்பிய சிறையில் கிரனைட் வெடித்தது ஐந்து கைதிகள் பலி; இருபது பேர் காயம்!

கொலம்பிய சிறைச்சாலைக்குள் பெண் ஒருவரால் மறைத்துக் கொண்டு செல்லப்பட்ட கிரனைட் வெடித்ததால், ஐந்து சிறைக் கைதிகள் கொல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய் இரவு கொலம்பிய விலாகேமோசாவில் சிறைச்சாலையில் நடைபெற்றது.

சிறைச்சாலை அதிகாரிகள் கருத்து வெளியிடுகையில் - கிரனைட் கொண்டுவந்த பெண் தனது உள்ளாடைக்குள் மறைத்துக் கொண்டு வந்ததாகவும், சிறைக் கைதிகளைப் பார்க்கவரும் பெண்களின் உடல்களைப் பரிசோதனை செய்வதில்லையெனவும் தெரிவித்தனர்.

இவ்வாறு பெண்கள் கொண்டு வந்த கிரனைட்டை சிறைக் கைதிகள் கையாள முற்பட்டவேளையில் அது வெடித்ததாகவும், உடனேயே ஸ்தலத்தில் மூவர் கொல்லப்பட்டும், பின்னர் வைத்தியசாலையில் இரு கைதிகள் கொல்லப்பட்டதாகவும் சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்தனர். அத்துடன், இந்தச் சம்பவத்தில் 20 கைதிகள் காயமடைந்தனர்.

கிரனைட்டை கொண்டுவந்ததாகக் கூறப்படும் பெண் கைதுசெய்யப்படாமல் தப்பிச் சென்றுள்ளதாக றொய்ட்டர் செய்தி நிறுவனம் தெரிவித்தது. கொலம்பியச் சிறைகளில் இவ்வாறான சம்பவம் அடிக்கடி இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# அமெரிக்க பாதுகாப்பு செயலர் பாக்தாத்திற்கு திடீர் விஜயம்!

அமெரிக்க பாதுகாப்பு செயலர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் திடீர் விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று ஈராக்கின் தலைநகர் பாக்தாத்திற்கு சென்றுள்ளார்.

ஈராக் கைதிகள் சிறையில் அமெரிக்கப் படைகளால் துன்புறுத்தப்பட்டது தொடர்பாக, ரம்ஸ்பீல்ட் மீது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு முடிவடைந்த நிலையில் இவரது பாக்தாத்திற்கான விஜயம் அமைந்துள்ளது.

மிகுந்த பாதுகாப்பின் மத்தியில் பாக்தாத் விமான நிலையம் சென்றடைந்த ரம்ஸ்பீல்ட் அங்கிருந்து சென்று பாக்தாத்திலுள்ள அமெரிக்க இராணுவ அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

ஈராக்கிலுள்ள அமெரிக்கப் படையினரின் உளப்பாங்கில் மாற்றத்தைக் கொண்டுவரும் வகையிலேயே ரம்ஸ்பீல்டின் பாக்தாத்திற்கான விஜயம் அமைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## இஸ்ரேலிய இராணுவம்

# காஸா அகதிமுகாம் மீது தாக்குதல் பத்து பலஸ்தீனப் பொதுமக்கள் பலி!



பலஸ்தீன - காஸா தென் பகுதியில் இரண்டு அகதி முகாம்கள் மீது இஸ்ரேலியப் படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் குறைந்தது பத்து பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர்.

முதலாவது அகதிமுகாம் மீது நடத்தப்பட்ட எறிகணைத் தாக்குதலில் 7 பேர் கொல்லப்பட்டனர். இந்த எழுவரும் குண்டுத் தாக்குதல் ஒன்றை நடத்துவதற்காக வெடிபொருட்களை தயார்ப்படுத்திக் கொண்டிருந்ததாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்தது.

மற்றொரு அகதிமுகாமான ரபா மீது நடத்தப்பட்ட தாக்குதலில் - மூவர் கொல்லப்பட்டும் 12 பேர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, காஸாப் பகுதியின் எகிப்திய எல்லைப் பிரதேசத்தில் இஸ்ரேலியப் படையினர் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதாகவும் இதன்போது, பலஸ்தீனருக்குச் சொந்தமான பல வீடுகள் அழிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## அமெரிக்கப் பிரஜைக்கு

# 5 வருட சிறைத் தண்டனை சீன நீதிமன்றம் விதித்தது



அமெரிக்க மனித உரிமை செயற்பாட்டாளரான ஜாங் ஜியாலினிக்கு சீன நீதிமன்றத்தினால் ஐந்து வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கப் பிரஜாவுரிமை பெற்றுள்ள ஜாங், வேவு பார்க்கும் நோக்கில் சீனாவிற்குள் பிரவேசித்ததாக குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளார். 1989 ஆம் ஆண்டு சீனாவின் தினமன் சதுக்கத்தில் ஜனநாயக ஆதரவாளர்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டங்களை சீனா ஒடுக்க முற்பட்டவேளை பெருமளவிலான பொதுமக்கள் கொல்லப்பட்டிருந்தனர்.

இந்தவேளையில், யாங் அமெரிக்காவில் குடியேறியிருந்தார். இதன்பின்னர் சீனாவிற்குத் திரும்பி வர இவருக்குத் தடை விதிக்கப்பட்டது. ஆனால், 2002 ஆம் ஆண்டு சீனாவுக்குள் நண்பர் ஒருவரின் கடவுச் சீட்டில் பிரவேசித்தவேளையில் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

சீனாவின் வட பகுதியில் தொழிலாளர்கள் மத்தியில் காணப்பட்ட பிரச்சினைகளை அறிந்துகொள்வதற்காகவே இவர் வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

மனித உரிமை அமைப்புக்கள் இவர் மீதான குற்றங்களில் அதிக கவனம் செலுத்தியுள்ளன. யாங் மீதான குற்றத்திற்கு எதுவித தீர்வும் இன்றி நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக மனித உரிமை அமைப்புக்கள் சீனாவின் மீது குற்றஞ்சுமத்தியிருந்தன.

யாங் விடுவிக்கப்படவேண்டும் என அமெரிக்கா தொடர்ந்து தெரிவித்து வந்தது. இவரது குற்றம் விசாரணைக்கு எடுக்கப்பட்டிருந்த வேளை- கேள்விகளுக்குப் பதிலளிக்க மறுத்திருந்தார். தான் சட்ட விரோதமாகக் கைது செய்யப்பட்டதாகவும், முடிவு ஏதுமின்றி நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் விசாரணையில் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் அமெரிக்காவுடன் தொடர்புள்ள உயர்மட்டக் கைதிகள் சீன நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## ஈராக் கைதிகள் துன்புறுத்தல் படங்களை

# அமெரிக்க சட்ட வல்லுநர்கள் பார்வையிட்டு வருகின்றனர்

அமெரிக்க சட்ட அறிஞர்கள் ஈராக் கைதிகள் துன்புறுத்தல் தொடர்பான வீடியோப் படங்களையும், புகைப்படங்களையும் பார்வையிட்டு வருகின்றனர்.

அமெரிக்க செனட்டர்களுக்கு இந்தப் படங்களைக் காண்பித்த வேளை அவர்கள் மிகவும் வெறுப்புடன் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. அத்துடன், ஈராக்கிய கைதிகள் துன்புறுத்தலுக்கும் அமெரிக்க பயணக் கைதியான நிக்பேக் க்ழுத்துவெட்டிக் கொல்லப்பட்டதற்கும் தொடர்புகள் இல்லையென அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.



இதேவேளை, பென்ரகன் ஈராக் கைதிகள் துன்புறுத்தல் தொடர்பான முழுப் படங்களையும் வெளியிடுவதெனத் தீர்மானித்துள்ளது.


இதன்மூலம், பத்திரிகைகளில் கைதிகள் துன்புறுத்தல் தொடர்பான படங்கள் படிப்படியாக பிரசுரிக்கப்படுவதை நிறுத்தமுடியுமெனவும் தெரிவித்துள்ளது.

ஈராக் கைதிகள் துன்புறுத்தல் தொடர்பாக அமெரிக்க இராணுவ சார்ஜன்டுகளான ஜவால் டேவிஷ், இவான் பெரிடெறிக் ஆகியோர் நீதிமன்றத்தில் நிறுத்தப்படவுள்ளனர். இவர்கள் ஈராக்கிய கைதிகளை நிர்வாணமாக வரிசையில் நிற்க வைத்து படமெடுத்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக்கில் கைதிகளிடம் இருந்து தகவல்கள் பெற்றுக்கொள்வதற்காக உபயோகிக்கப்படும் சில வழிமுறைகளுக்கு பாதுகாப்புச் செயலர் றொனால்ட் ரம்ஸ் பீல்ட் ஆதரவு தெரிவித்துள்ளார். நாடாளுமன்ற அங்கத்தவர்களினால், உருவாக்கப்பட்ட குழுவிற்கு ரம்ஷ் பீல்ட் தெரிவிக்கையில் -

கைதிகளை நித்திரை செய்ய விடாது தடுத்தல், மாறுபட்ட உணவுகளை வழங்குதல் ஆகியன கைதிகள் மீது பொதுவாக மேற்கொள்ளும் தண்டனைகள் எனவும் தெரிவித்தார்.

# பாண்டா இன கரடிகளின் பொம்மைக் கண்காட்சி



அபூர்வ இன பாண்டா கரடிகளை பாதுகாக்க பல்வேறு நாடுகளும் நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன. பாண்டா கரடிகளை பாதுகாக்க ஒரு விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் வகையில் வொஷிங்ரனில் உள்ள ஒரு பூங்காவில் கண்காட்சி நடத்தப்பட்டது.

இதில் 15 இராட்சத பாண்டா கரடிகளின் பொம்மைகள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. இது தவிர 150 மற்ற விலங்குகளின் பொம்மைகளும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

## வன்செயல்களை அடுத்து

# நைஜீரியாவில் கிறிஸ்தவர்கள் பொலிஸ் நிலையங்களில் தஞ்சம்

நைஜீரியாவின் வடபகுதி நகரான கானோவில் கடந்த இரண்டு நாட்களாக முஸ்லிம் இளைஞர்களால் மேற்கொள்ளப்பட்டுவந்த வன்முறைச் சம்பவங்களை அடுத்து, ஆயிரக்கணக்கான அப்பகுதி கிறிஸ்தவர்கள் தமது இரவுப் பொழுதை பொலிஸ் நிலையத்தில் கழித்துள்ளனர்.

இந்தக் கிறிஸ்தவர்கள் மீது முஸ்லிம் இளைஞர் குழு கத்திகளாலும், வாள்களினாலும் தாக்குதலை நடத்தியது. இதனால் முப்பது பேர்வரை கொல்லப்பட்டு '50 பேர்வரை படுகாயமடைந்தனர்.

இதனையடுத்து அப்பகுதியில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. தாக்குதலை மேற்கொண்ட முஸ்லிம் இளைஞர்கள் வேலை அற்றவர்கள் எனவும், மதத்தின் பெயரால் கொள்ளைகளையும் வன்முறைச் சம்பவங்களையும் மேற்கொண்டு வந்துள்ளனர் எனவும் பி.பி.சியின் அனா போர்செலோ தெரிவித்துள்ளார்.



தாக்குதல் நடத்தப்பட்ட பிரதேசத்தில் பொலிஸாரும், படை வீரர்களும் காவல் கடமையில் ஈடுபட்டுள்ளனர். இச்சம்பவத்தின்பின் கிறிஸ்தவமக்களை அப்பிரதேசங்களில் இருந்து வெளியேறி வேறு இடங்களில் இருக்குமாறு அப்பிரதேச ஆளுநர் கேட்டுள்ளார்.

நைஜீரியாவில் முஸ்லிம் மக்களின் எண்ணிக்கை கிறிஸ்தவர்கள், அனிமிஷ் ஆகிய இரு பகுதிகளுக்கு சமமாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சிரியா மீது பொருளாதாரத் தடை அமெரிக்க அரசு அமுல்படுத்தியது

சிரிய நாடு தீவிரவாதிகளுக்கு ஆதரவு கொடுத்து வருவதால், அந்த நாட்டின் மீது பொருளாதாரத் தடையை அமெரிக்கா கொண்டு வந்தது. தன் நாட்டில் உள்ள சிரியாவின் சொத்துக்களையும் அமெரிக்கா முடக்கியுள்ளது.

உலக நோக்கு

ஈராக் அருகே உள்ள சிரியா வெளிநாட்டு தீவிரவாதிகள் ஈராக்கிற்குள் நுழைய வசதி செய்து கொடுப்பதாகவும், தீவிரவாதிகளுக்கு ஆதரவு கொடுப்பதாகவும் அமெரிக்கா குற்றஞ்சாட்டிவந்தது.

சிரியா தன் போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று அமெரிக்கா அந்த நாட்டுடன் பேச்சுவார்த்தை நடத்திப்பார்த்தது. அமெரிக்காவின் கவலையை சிரிய ஜனாதிபதியிடம் அமெரிக்க வெளிநாட்டு செயலர் கொலின்பவல் திரும்பத் திரும்ப வலியுறுத்தினார். ஆனால் சிரிய தன் போக்கை மாற்றிக்கொள்ளவே இல்லை.

இதனால் அந்த நாட்டின் மீது பொருளாதாரத் தடையை பிரகடனம் செய்வது என்று அமெரிக்கா தீர்மானித்தது. அது எப்போது என்பது மட்டும், தீர்மானம் ஆகாமல் இருந்தது.

இந்த நிலையில் கடந்த சில நாட்களாகவே சிரியா மீது அமெரிக்கா பொருளாதாரத் தடையை அறிவிக்கும் என்ற செய்தி உலவி வந்தது. இதை உண்மையாக்கும் விதத்தில் சிரியா மீது அமெரிக்கா நேற்றுமுன்தினம் பொருளாதாரத் தடையை பிரகடனப் படுத்தியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# இலங்கை சமாதான முயற்சிகளுக்கு அமெரிக்கா பூரண ஆதரவளிக்குமாம்

## கதிர்காமர் கூறுகிறார்

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு அமெரிக்கா முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என தம்மிடம் உறுதியளித்திருப்பதாக இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்தார்.

அமெரிக்காவில் சுற்றுலாவினை மேற்கொண்டிருக்கும் கதிர்காமர் அமெரிக்க இராஜாங்க செயலர் கொலின் பவல்ல சந்தித்த பின்னரே இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

கொலின் பவல், பிரதி இராஜாங்கச் செயலாளர் ரிச்சர்ட் ஆர்மிரேஜ் மற்றும் பல அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். இலங்கையின் சமாதானம் தொடர்பாக அமெரிக்காவின் ஆதரவை பெற்றுக் கொள்வதில் எவ்வித பிரச்சினையும் இருப்பதாக தாம் கருதவில்லை எனவும் இந்தப் பேச்சுக்களின் போது அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்கா ஒருபோதும் இலங்கையில் பிரிவினைக்கு ஆதரவு வழங்கப் போவதில்லை எனவும் இந்த நிலையில் சுயநிர்ணயம், நாட்டின் ஒருமைப்பாடு மற்றும் சமஷ்டி என்பவை தொடர்பாக பேச்சுக்களை நடத்தமுடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கையின் சமாதானத்துக்கு அமெரிக்கா தமது பூரண ஆதரவை வழங்கும் என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் ரிச்சட் பௌச்சர் தெரிவித்தார். இலங்கையில் போர் நிறுத்த உடன்பாடு முன்னெடுத்து செல்லப்படுகின்ற அதேநேரம் இரு தரப்பும் பேச்சுக்களில் ஈடுபடத் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கையில் சமாதானம் உதயமாக வேண்டும் என்பதே அமெரிகாவின் எதிர்பார்ப்பாகும். அதற்குத் தேவையான சகல ஒத்துழைப்புக்களையும் இலங்கை அரசாங்கத்திற்குப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமெரிக்க பிரதி இராஜாங்கச் செயலாளர் ரிச்சட் ஆர்மிரேஜ் குறிப்பிட்டுள்ளார். அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அலுவலகத்தில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் சந்தித்துக் கலந்துரையாடிய போதே, ரிச்சட் ஆர்மிரேஜ் இவ்வாறு தெரிவித்தார்.

# ஜப்பானியத் தூதுவர் அகாஷி ஐந்து நாள் விஜயமாக வருகிறார்

(கொழும்பு)

ஜப்பானிய அரசின் இலங்கைக்கான விசேட தூதுவர் யசூசி அகாஷி ஐந்து நாள் விஜயமாக நாளை கொழும்பு வரவுள்ளார்.

கடந்த 2002 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இலங்கைக்கான விசேட தூதுவராக நியமிக்கப்பட்ட பின்னர் ஏழாவது தடவையாக கொழும்பு வரும் அகாஷி ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர் சமாதான முயற்சிகள் குறித்து பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

இவர் தனது இலங்கைக்கான விஜயத்தில் ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் சமாதான முயற்சிகளுடன் தொடர்புடைய அதிகாரிகளுடனும், கிளிநொச்சியில் புலிகளின் பிரதிநிதிகளுடனும் சமாதான முயற்சிகள் மற்றும் புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடல்களை நடத்தவுள்ளார்.

எதிர்வரும் 19 ஆம் திகதி கொழும்பிலிருந்து [illegible] அகாஷி அன்று [illegible] மணியளவில் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசுவார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# சமாதான பணிகளை ஒருங்கிணைக்க ஜனாதிபதி தலைமையில் செயலகம்

(கொழும்பு)

அரசாங்கத்தின் சமாதானப் பணிகளைத் தொடர்புபடுத்த தேசிய சபை ஒன்றுஅமைக்கப்படவுள்ளது. இந்தத் தேசிய சபையின் தலைவராக ஜனாதிபதியே பதவிவகிப்பார் என, ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது. சமாதானம் சம்பந்தமாக முழுப்பணிகளையும் கட்சிகளையும் தொடர்புபடுத்தும் நடவடிக்கைகளை இந்தச்சபை மேற்கொள்ளும். அத்துடன்- நிவாரண, புனருத்தாரண அமைப்புக்களும், சமாதான செயலகமும் இந்தச் சபைக்குள் அடங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

போர் நிறுத்த உடன்பாட்டின் நடைமுறை வடக்கு - கிழக்கின் தமிழர் மற்றும் முஸ்லிம்கள் அரசாங்கப்படைகள், பொலிஸ் என்பவை தொடர்பாக சமாதானசெயலகம் தனது நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

சமாதானம் சம்பந்தமாகவும், போர் நிறுத்தக் கண்காணிப்புப் பணிகள் சம்பந்தமாகவும், தமிழீழ விடுதலைப்புலிகள் சம்பந்தமான விடயங்களையும்,சமாதான செயலகமே கையாளும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (01)

# தமிழகத்தில் தங்கியிருந்த 14 அகதிகள் மன்னார் வந்தனர்

தமிழ்நாடு - மதுரை மாவட்டம் ஆணையூர் அகதிமுகாமில் தங்கியிருந்த ஈழத்தமிழ் அகதிகளில் 14 பேர் நேற்று முன்தினம் அதிகாலை மன்னாரை வந்தடைந்தனர்.

[illegible]லைக் கடல் வழியாக வந்த இந்த 14 பேரில் 11 ஆண்களும் 3 பெண்களும் அடங்குவர்.

தலைமன்னார், சாவற்கட்டு, சின்னக்கடை, பேசாலை போன்ற இடங்களைச் சேர்ந்த இவர்களை மன்னார் நகரப் பிரதேசசெயலர் சொந்த இடங்களில் மீள்குடியமர்வதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார். (201)

## இந்தியாவில்...

கடந்த தேர்தலில் 298 ஆசனங்களைப் பெற்ற பா.ஜ.க கூட்டணி 110 இடங்களைப் பறிகொடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

தமிழகம் மற்றும் புதுவை உள்ளிட்ட 40 தொகுதிகளிலும் தி.மு.க கூட்டணி பெருவெற்றி பெற்று புதிய வரலாறு படைத்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தேர்தலில் 219 ஆசனங்களைக் கைப்பற்றிய காங்கிரஸ் கூட்டணி இடது சாரிக் கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சியமைக்கவுள்ளது. புதிய பிரதமராக சோனியாகாந்தி பதவியேற்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தமது கட்சி தேர்தலில் தோல்வியடைந்ததையடுத்து பிரதமர் வாஜ்பாய் நேற்று மாலை இராஜினாமாச் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# யுவதியை கடத்தியவர்கள்...

அந்த வானை மோட்டார் சைக்கிளில் துரத்திச்சென்றனர். பாடசாலையை விட்டுத் தனது பிள்ளையை ஏற்றிவந்த தந்தை ஒருவரும் இவர்களுடன் இந்த வானை துரத்திச் சென்றார்.

ஓட்டுமடச் சந்தியை தாண்டிச் சென்ற வேளையில்- எதிரே வந்த மினிபஸ் சாரதிக்கு பொதுமக்கள் கொடுத்த சமிக்ஞையை அடுத்து, வானைச் செல்லவிடாமல் அங்கு தடுத்தனர். இதனையடுத்து இந்த வான், சுற்றிவளைக்கப்பட்டு பொதுமக்களால் ஐந்து இளைஞர்கள் பிடிக்கப்பட்டனர். மூன்றுபேர் தப்பிச் சென்றுவிட்டனர். பொதுமக்களால் பீடிக்கப்பட்ட இளைஞர்கள் நையப் புடைக்கப்பட்டனர். யுவதியைக் கடத்திச் சென்ற வாகனத்திலிருந்து வாள் மற்றும் பொல்லுகளும் பொதுமக்களால் கைப்பற்றப்பட்டன.

பொதுமக்களால் பிடிக்கப்பட்ட இளைஞர்களும், குறிப்பிட்ட கடத்தற் சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட வாகனமும் நேற்று மாலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டன.

## ஜனாதிபதி....

செல்வன் மற்றும் அடேல்பாலசிங்கம் ஆகியோர் பங்கேற்றனர்.

இந்தச்சந்திப்பில் ஜனாதிபதி சந்திரிகாவிடம் இருந்து விசேட செய்தியொன்றை எடுத்துவந்த நோர்வேத் தூதுக்குழுவினர், அதனைப் புலிகளிடம் எடுத்துக் கூறினர்.

இதற்குப்புலிகள் அளித்த பதிலுடன் கொழும்பு சென்ற நோர்வே தூதுக்குழுவினர் - இந்தப்பேச்சுக்களின் விபரங்களை ஜனாதிபதி சந்திரிகாவிடம் நேற்றுமாலை விளக்கியதாகவும் தெரியவருகின்றது.

## மினிபஸ்...

மோதிய மினிபஸ் அப் பகுதியில் திரண்டிருந்த பொதுமக்களால் தீயிட்டுக் கொழுத்தப்பட்டது.

சிறுவனின் உடல் மரணவிசாரணையைத் தொடர்ந்து, பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு, யாழ். போதனா வைத்தியசாலையில் வைத்து பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது. (ப)

# பேச்சுக்கள் எங்கே?...

திருப்திகரமான முறையிலும், ஆக்கபூர்வமான முறையிலும் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன.

சந்திரிகா குமாரதுங்க எப்படியாவது இந்தப் பேச்சுவார்த்தைகளை விடுதலைப் புலிகளுடன் ஆரம்பிக்க வேண்டும் என்பதில் மிகவும் தீவிரமான அக்கறை காட்டிவருவதால் சில அடிப்படை விடயங்களில் இணக்கப்பாடு காணப்பட்டு வருகின்றது.

இந்தப் பேச்சுவார்த்தைகளை எங்கே நடத்துவது? எப்போது நடத்துவது? என்ற விடயங்கள் குறித்த முடிவு இன்னும் ஓரிரு தினங்களில் காணப்படும். ஆகவே இப்போது நான் அதைப்பற்றி எதுவும் சொல்ல முடியாதுள்ளது.

ஏனென்றால், இன்னும் சில பிரச்சினைகள் தொடர்பாக கதைத்து அவற்றை நோர்வேயின் சமாதானத் தூதுவர் சந்திரிகா அம்மையாரிடம் எடுத்துச் சென்று அவருடன் கதைத்து எங்களுக்கு ஒரு இறுதிமுடிவை சொல்வார்கள்.

ஆகவே, இரு தரப்பினருக்கும் மத்தியில் இணக்கப்பாடு கண்டு அடிப்படையான சில விடயங்களில் ஒத்திசைவு காணப்பட்டு பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதற்கான ஒரு நல்ல புறநிலை உருவாகி வருகிறது என்பதை மட்டும் நாங்கள் உறுதியாகச் சொல்லலாம்.

கேள்வி:- இதைவிட முக்கியமான விடயங்கள் குறித்து மேலதிகமாக ஆராயப்பட்டதா? அல்லது உங்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதா?

பதில்:- சில அடிப்படை விடயங்கள் சம்பந்தப்பட்ட ரீதியில் உதாரணமாக விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழீழ மக்களின் ஏகபிரதிநிதிகள் அவர்களுடன் மட்டும் தான் பேச்சுக்கள் நடத்த வேண்டும் என்றும், பேச்சுக்கள் மேல் அவர்களுக்கு சமத்துவமான அந்தஸ்துகள் வழங்கப்படல் வேண்டும். பேச்சுக்கள் இலங்கைக்கு வெளியே நடைபெற வேண்டும். இப்படியான சில பிரச்சினைகளுக்கு இணக்கப்பாடு காணப்பட்டிருக்கின்றன.

இன்றும் திருப்திகரமான முறையில் இந்த இணக்கப்பாடு அமையப் பெற்றிருந்தது. ஆனால், மேலும் சில நடைமுறைப் பிரச்சனைகள் இருக்கின்றது.

முதலாவது பேச்சை எங்கே நடத்துவது. எப்போது நடத்துவது என்ற ரீதியில் இங்கே சில நடைமுறைப் பிரச்சினைகளிலும் சில சிக்கல்கள் இருப்பதும், இது சம்பந்தமாகத்தான் இன்றும் கதைத்து, இதற்கொரு தெளிவான முடிவை காண்பதற்கு நோர்வேத் தூதுவர் முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே, எல்லாவற்றுக்கும் ஒரு உறுதியான முடிவுகாணப்படும். இறுதியில் இன்னும் ஓரிரு தினங்களில் அனேகமாக நோர்வே அரசுதான் ஒரு பொதுவான கூட்டறிக்கை மற்றும் இரு தரப்பிற்கும் மத்தியில் காணப்பட்ட இணக்கம் சம்பந்தமாக ஒரு அறிக்கையை விடுவார்கள்.

கேள்வி:- இறுதித்தீர்வு தொடர்பான பேச்சுவார்த்தையில் நிர்வாக சபை தொடர்பான பேச்சுவார்த்தைகளையும் சமாந்தரமாக நடத்த வேண்டும் என்று இலங்கை அரசாங்கம் கூறுவது குறித்து உங்கள் கருத்து என்ன?

பதில்:- எங்கள் நிலைப்பாடு இது தான் திரும்பி திரும்பி இதைத்தான் சொல்கிறோம் முதலில் இடைக்கால நிர்வாக கட்டமைப்பு பற்றித்தான் பேசப்படல்வேண்டும்

அதில் ஒரு இணக்கப்பாடு காணப்படல் வேண்டும் அது நடைமுறைப் படுத்தப்படல் வேண்டும் அதற்கு அப்புறம் தான் இனப்பிரச்சினை தொடர்பாக பேச்சுக்கள் தொடர வேண்டும் என்பதுதான் எங்கள் நிலைப்பாடு

அதைத்தான் நாங்கள் திரும்பத் திரும்ப வலியுறுத்தி வருகிறோம் ஆகவே எங்களுக்கு திருப்திகரமான இணக்கப்பாடு வரும் என நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

IBMS
புதிய நிர்வாகத்தின் கீழ் நவீன தொழில் நுட்ப அறிமுகங்களுடன்
COMPUTER COURSES
New Batches Start on 12.06.2004 & 14.06.2004 at 10.00 a.m.
DIPLOMA IN MICROSOFT OFFICE
DIPLOMA IN INTERNET TECHNOLOGY
DIPLOMA IN HARDWARE ENGINEERING
DIPLOMA IN DESK TOP PUBLISHING
Certificate Courses
Java, Visual Basic, C++, Oracle, MS Word, MS Excel, MS Access, Photoshop, Page Maker, Corel DRAW
• Registered with Tertiary and Vocational Education Commission, Sri Lanka.
• Registered to Association of Computer Training Organisations, Sri Lanka.
Institute of Business Management Studies
# 410, K.K.S. Road, Jaffna.
T.P : 021 222 3165
Nelliady, Karaveddy
Chavakachcheri

# மரண அறிவித்தல்

## திருமதி சிவஞானம் கந்தசாமி

தோற்றம் 04 - 05 - 1933 மறைவு 12 - 05 - 2004

புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், சிவன்கோவில் வீதி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்டு தற்போது 119/1 குட்செட் வீதி, வவுனியாவை தற்காலிக வதிவிடமாகக் கொண்டவருமான திருமதி சிவஞானம் கந்தசாமி 12.05.2004 அன்று இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் கந்தசாமியின் (ஓய்வுபெற்ற வெளிக்கள உத்தியோகத்தர், மலேரியா தடுப்புப் பிரிவு) அன்பு மனைவியும், காலஞ்சென்ற நாகலிங்கம் அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், பிரபாலினி (ஆசிரியை வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), சுபாஸ்கரன் (பிரான்ஸ்), சுரேஸ்கரன் (நோர்வே), சுதேஸ்கரன் (ஆசிரியர் வவுனியா ஒலுமடு தமிழ் வித்தியாலயம்), சுபாலினி (ஆசிரியை வவுனியா றம்பைக்குளம் மகளிர் ம.வி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், வரதராஜன் (மட்டுவில்), சத்திய லட்சுமி (பிரான்ஸ்), திலகம் (நோர்வே), வசந்தகுமார் (வவுனியா தபாலகம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான தம்பிராசா, கனகரத்தினம், சற்குணம், புவனேஸ்வரி மற்றும் ரத்தினம் (கனடா), செல்வபூபதி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், உமையாள் (மாணவி றம்பைக்குளம் மகளிர் ம.வி - வவுனியா), கௌதமன் (பிரான்ஸ்), கௌசல்யா (பிரான்ஸ்), கௌசிகா (நோர்வே), காவிகா (நோர்வே) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 14.05.2004 அன்று வெள்ளிக்கிழமை பி.ப 1.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக தோணிக்கல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
கணவர், பிள்ளைகள்
தொலைபேசி இல:- 077-6006483 (சி-2524)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 14.5.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.